# நபிகளாரின் பொன்மொழிகள்



Dr. எம்.எம்.அப்துல் காதிர் உமரீ

வெளியீட்டு எண்: 5

# நபிகளாரின் பொன்மொழிகள்

ஆசிரியர்
மவ்லவீ. **Dr. M.M.** அப்துல் காதிர் உமரீ
(திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பாளர் IPRC)

வெளியீடு:
**IPRC**
**இஸ்லாமியப் பதிப்பகம்**
**மற்றும் ஆய்வு மையம்**
**ISLAMIC PUBLICATIONS & RESEARCH CENTRE**

# நபிகளாரின் பொன்மொழிகள்


| | | |
|---|---|---|
| பொருள் | : | நபி(ஸல்) அவர்களின் சொல், செயல் மற்றும் அங்கீகாரம் குறித்த செய்தித் தொகுப்பு |
| ஆசிரியர் | : | மவ்லவீ Dr. M.M. அப்துல் காதிர் உமரீ<br>Moulavi Dr. M.M. Abdul Kadir Umari |
| பக்கங்கள் | : | 48 |
| பிரதிகள் | : | 2000 |
| முதல் பதிப்பு | : | ஜுமாதுல் அவ்வல் 1442 - டிசம்பர் 2020 |
| வடிவமைப்பு | : | ஸஃபா கிராஃபிக்ஸ், மதுரை-20.<br>9364414441. |
| வெளியீடு | : | இஸ்லாமியப் பதிப்பகம் மற்றும் ஆய்வு மையம், மதுரை-625020. 9364414441.<br>மின்னஞ்சல்: iprcindia2000@gmail.com |
| **விலை** | : | **ரூபாய் 30/-** |

*NABIGALARIN PONMOZHIGAL*

▣ *Author: MOULAVI, DR. M.M. ABDUL KADIR UMARI*
▣ *First Edition: J. Awwal 1442 Hijri - December 2020* ▣ *Copies 2000*
▣ *Publications: IPRC, Madurai - 625020. Ph: +91-93644-14441*
*E-mail: iprcindia2000@gmail.com*

***Price: INR 30/-***



© **IPRC - ISLAMIC PUBLICATIONS & RESEARCH CENTRE**
*All rights reserved for IPRC and Author only. No part of this publication may be reproduced or transmitted in any form or any information storage or retrieval system, without permission and written order from The Author or IPRC.*

*அளவற்ற அருளாளன், நிகரற்ற கருணையாளன் அல்லாஹ்வின் பெயரால்...*

# பதிப்புரை

*எல்லாம் வல்ல அல்லாஹ்விற்கே புகழனைத்தும்! அவனே மனிதர்கள் அனைவரையும் படைத்தான்; இந்த அண்டசராசரம் முழுவதையும் அதில் நாம் காணும் ஒவ்வொன்றையும் நமக்காகவே படைத்தான்; நாம் சிறந்த முறையில் வாழ்வதற்கு இறைத்தூதர்களை அனுப்பினான்; அவர்களூடன் தன் வேதங்களையும் அளித்தான்; தம் இறுதித்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களை தம் இறுதிவேதம் திருக்குர்ஆனுடன் அவனே அனுப்பினான்.*

*இறுதித்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் சொல், செயல், அங்கீகாரம் மற்றும் அவர்களின் தன்மைகள் அடங்கிய செய்திகள் 'ஹதீஸ்கள்' (நபிமொழிகள்) எனப்படுகின்றன. ஹதீஸ்களைத் தொகுப்பதற்கு இஸ்லாமிய அறிஞர்களால் பல இலட்சம் அறிவிப்பாளர்களின் வரலாறுகள் ஆய்வு செய்யப் பட்டன. எவ்விதக் கலப்புமற்று மிகத்தூய நிலையில் நபி மொழிகள் இருக்க வேண்டும் என நபியவர்கள் எச்சரிக்கை செய்திருந்தன் காரணமாகவே இவ்வாறு ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டன..*

*முஸ்லிம்களுக்கு மட்டுமல்லாது மனிதகுலத்திற்கே வழி காட்டியாக திருக்குர்ஆனையும் நபிமொழிகளையும் இறைவன் அளித்துள்ளமையால், நபிமொழிகளில் சிலவற்றை திருக் குர்ஆன் மொழிபெயர்ப்பாளர் Dr. M.M. அப்துல் காதிர் உமரீ தமக்கே உரிய பாணியில் தொகுத்தளித்துள்ளார். இது பொது மக்களுக்குப் பயனுள்ளதாய் இருக்கும் என நம்புகிறோம். இச்சிறு நூலை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.*

*தொகுப்பாசிரியருக்கும், இந்நூல் வெளிவரத் துணைநின்ற அனைவருக்கும், எல்லாவற்றுக்கும் மேலாக இறைவனுக்கும் நன்றியைத் தெரிவிக்கிறோம்.*

*அன்புடன்*

***Dr. சையது அலீ ஃபாத்திமா***

*நிறுவனர், இஸ்லாமியப் பதிப்பகம் மற்றும் ஆய்வு மையம்* ***(IPRC)***

*மதுரை*
*10.12.2020*

# முன்னுரை

*புகழனைத்தும் வல்ல இறைவனுக்கே!*

*இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களிடம் நாம் கற்பதற்கு ஏராளமான விஷயங்கள் உள்ளன. நபியவர்களை முஸ்லிம்களின் தலைவராக மட்டும் பார்க்கமுடியாது; அவர்கள் மனிதகுலத்தின் வழிகாட்டி, ஒரு முன்மாதிரி. அவர்களின் சமூகப்பார்வையும், கட்டமைப்பும் உலக அழிவு நாள் வரை மனிதர்களுக்கு அவசியத் தேவையாய் இருக்கிறது. அவற்றை இச்சிறு நூலில் விளக்குதல் சாத்தியமற்றது. எனவே, நபியவர்களின் சொல், செயல், அங்கீகாரம் அடங்கிய நபிமொழித் தொகுப்பு நூல்கள் மற்றும் நபியவர்கள் தொடர்பான வரலாற்று ஆய்வுகளை நாம் படித்தால் மட்டுமே முழு விளக்கம் பெறுதல் சாத்தியம்..*

*முஸ்லிம் என்பதையும் தாண்டி மனிதன் என்ற அடிப்படையில் ஒருவன் எப்படி வாழவேண்டும் என்பதில் பல செய்திகளை மனிதகுலத்திற்கு நபியவர்கள் அளித்துள்ளார்கள். அவற்றில் எம்மால் இயன்ற சில செய்திகளை மட்டுமே அறிமுகமாய் இச்சிறு நூலின் வாயிலாகப் பகிர்கிறேன். இது வாசக அன்பர்களுக்குப் பயனளிக்கும் என நம்புகிறேன்.*

*இறைவன் நாடினால் விரைவில் நபிமொழித் தொகுப்பில் மிகச் சிறந்த இரண்டு நூல்களை சமூகத்திற்குச் சமர்ப்பிக்க உள்ளேன் என்பதை அகமகிழ்ந்து தெரிவிக்கிறேன். இறையருள் பெருகி இப்பணி நிறைவுற இறைவனை இறைஞ்சிட வாசகர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.*

*அச்சுப்பிழைகளைச் சரிபார்த்த சகோதரர் S. அஹமது ஆதில் B.Sc., VISCOM., இந்நூல் வெளிவரத் துணைநின்றோருக்கும், எல்லாவற்றுக்கும் மேலாக வல்ல இறைவனுக்கும் உளமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறேன்.*

*மதுரை* — *இறைப்பணியில் உங்கள் சகோதரன்*
*10.12.2020* — ***Dr. M.M. அப்துல் காதிர் உமரீ***
*திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பாளர்*

# நபிகளாரின் பொன்மொழிகள்

## எண்ணம் போல் வாழ்வு!

*“செயல்கள் அனைத்தும் எண்ணங்களின்படியே அமைகின்றன. ஒவ்வொருவருக்கும் அவர் எண்ணியதே கிடைக்கிறது...” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: உமர் இப்னு அல் கத்தாப்(ரலி), நூல்: புகாரீ 1***

## மனம் கெட்டால் மதியும் கெடும்

*“...எச்சரிக்கை! உடலில் ஒரு சதைத் துண்டு இருக்கிறது. அது சீராய் இருந்தால் உடல் முழுவதும் சீராய் இருக்கும். அது சீர்குலைந்து விட்டால் முழு உடலும் சீர்குலைந்துவிடும். அறிந்து கொள்ளுங்கள். அதுதான் இதயம்!” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்வர்: நுஃமான் இப்னு பஷீர்(ரலி), நூல்: புகாரீ 52***

## கோபப்படாதீர்!

*“இறைத்தூதர் அவர்களே! எனக்கு உபதேசம் செய்யுங்கள்” என ஒருவர் இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் கேட்டார்.*

*“கோபம் கொள்ளாதீர்! என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

*அவர் மறுபடியும் கேட்டார்.*

*அப்போதும், “கோபம் கொள்ளாதீர்!” என்றே இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.* ***அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: புகாரீ***

## புறம் பேசாதீர்!

*“புறம் பேசுதல் என்றால் என்னவென்று அறிவீர்களா?” என இறைத்தூதர்(ஸல்) தம் தோழர்களிடம் கேட்டார்கள்.*

*“இறைவனும், இறைத்தூதருமே அறிவர்” என தோழர்கள் கூறினார்கள்.*

*“உன் சகோதரன் தன்னைக் குறித்து பிறரிடம் சொல்ல விரும்பாத ஒரு விஷயத்தை நீங்கள் பிறரிடம் சொல்வது” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

*"நான் கூறுகிற குறை என் சகோதரனிடம் உண்மையிலேயே காணப்பட்டாலுமா?" என ஒருவர் கேட்டார்.*

*"அவரிடம் காணும் குறையை அவரிடமே சொல்லாமல் பிறரிடம் சொன்னால், நீங்கள் அவர் குறித்து புறம் பேசி விட்டீர்கள். அவரிடம் இல்லாத ஒன்றை நீங்கள் சொன்னால் அவர் மீது அவதூறு சுமத்திவிட்டீர்கள்" என இறைத்தூதர் (ஸல்) பதிலளித்தார்கள்.*

***அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம்***

## பொறாமை கொள்ளாதீர்!

*"ஒருவருக்கொருவர் பொறாமை கொள்ளாதீர்கள்! ஒருவருக் கொருவர் தீய வார்த்தை பேசிக்கொள்ளாதீர்கள்! இன்னும் பொருளின் விலையை ஏற்றிவிடுவதற்காக விலை பேசாதீர்கள். ஒருவரின் வியாபாரத்தில் இடையே புகுந்து நீங்கள் வியாபாரம் செய்ய முயலாதீர்கள். நீங்கள் இறைவனின் அடியார்களாகவும் உங்களுக்குள் சகோதரர்களாகவும் இருங்கள்!" என இறைத் தூதர் (ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம்***

*"பொறாமை கொள்ளாதிருக்கும்படி உங்களை எச்சரிக்கிறேன். ஏனெனில், நெருப்பு விறகைத் தின்றுவிடுவதைப் போல பொறாமை உங்கள் நற்செயல்களைத் தின்றுவிடும்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: அபூ தாவூத்***

## குற்றம் புரிந்தவன்

*"ஒவ்வொரு மனிதனும் தவறிழைக்கக் கூடியவன்தான். தாம் செய்த குற்றத்திற்காக பிராயசித்தம் தேடிக்கொள்பவர்களே சிறந்தவர்கள்' என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: அனஸ்(ரலி), நூல்: திர்மிதீ 2536***

## நல்லதையே பேசுங்கள்!

*"இறைவன் மீதும் இறந்த பின்னர் எழுப்பப்படும் நாளின் மீதும் நம்பிக்கை உள்ளவர் பேசினால் நல்லதையே பேசட்டும்; அல்லது அமைதியாய் இருக்கட்டும்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.* ***அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: புகாரீ 6018***

## மக்களுக்கு அமைதி ஏற்படுத்துபவர்

*"அனுமதிக்கப்பட்ட நல்ல உணவுகளைச் சாப்பிட்டு, இறைத் தூதரின் வழிநடந்து, தம்மால் ஏற்படும் தொல்லைகளை விட்டும் மக்களை அமைதியுறச் செய்கிறவர் சுவர்க்கத்தில் புகுவார்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

**அறிவித்தவர்: அபூ ஸயீத் அல் குத்ரீ(ரலி), நூல்: திர்மிதீ**

## உணவளியுங்கள்!

*''ஒருவர் இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் 'இஸ்லாமில் சிறந்தது எது' எனக் கேட்டார்.*

*"நீர் உணவளிப்பதும், அறிந்தவருக்கும் அறியாதவருக்கும் நீர் ஸலாம் கூறுவதும்" என கூறினார்கள்*

**அறிவித்தவர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர்(ரலி), நூல்: புகாரீ 12**

## விருந்தோம்பல்

*"அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டவர் தம் விருந்தினரைக் கண்ணியமாக நடத்தட்டும். விருந்தினருக்கு அளிக்கும் கொடை ஒரு பகல் ஓர் இரவு (உபசரிப்பது) ஆகும். விருந்துபசாரம் மூன்று தினங்களாகும். அதற்கு மேல் (உபசரிப்பது) தர்மமாக அமையும் உபசரிப்பவரைச் சிரமப் படுத்தும் அளவுக்கு அவரிடம் தங்குவது விருந்தாளிக்கு அனுமதிக்கப்பட்டதன்று" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: புகாரீ 6135**

## இறைதியானம்

*"என் அடியான் என்னைப் பற்றி எண்ணும் விதத்தில் நான் இருக்கிறேன். அவன் என்னை நினைக்கும்போது நான் அவனுடன் இருக்கிறேன். அவன் என்னைத் தன் மனதில் நினைவு கூர்ந்தால் நானும் அவனை என் மனத்தில் நினைவு கூர்கிறேன். அவன் என்னை ஒரு கூட்டத்தில் நினைவுகூர்ந்தால், அவர்களைவிட மேலான (வானவர்களின்) கூட்டத்தில் நான் அவனை நினைவுகூர்கிறேன். மேலும், அவன் என் பக்கமாக ஒரு சாண் நெருங்கிவந்தால் நான் அவனிடம் ஒரு முழம் நெருங்கிச் செல்கிறேன். அவன் என் பக்கம் நடத்துவந்தால்*

நான் அவன் பக்கம் ஓடிச்செல்கிறேன்' என்று அல்லாஹ் கூறினான்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: புகாரீ, முஸ்லிம்**

## நன்மைகளைச் செய்யுங்கள்!

"ஒரு நன்மை செய்பவருக்கு அதே போன்று பத்து மடங்கு (நன்மைகள்) உள்ளன; அவன் எண்ணத்திற்கு ஏற்ற வகையில் நான் அதிகமாகவும் கொடுப்பேன். ஒரு தீமையைச் செய்ப வருக்கு அதே போன்ற ஒரு தீமைக்கான கூலியே உண்டு. எனினும் என் அருளால் அதையும் நான் மன்னித்து விடுகிறேன்' என்று அல்லாஹ் கூறினான்' என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அபூ தர்(ரலி), நூல்: முஸ்லிம்**

## சாலைகளைத் தூய்மைப்படுத்துங்கள்!

"ஒருவருக்கு வழி காட்டுவதும் தர்மமாகும். பாதைகளிலிருந்து கல், முள், எலும்பு முதலிய மனிதனுக்கு தீங்கு தரக்கூடியவற்றை அப்புறப்படுத்துவதும் தர்மமாகும்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள். **அறிவித்தவர்: ஜாபிர்(ரலி), நூல்: முஸ்லிம்**

''இறைநம்பிக்கை எழுபதுக்கும் மேற்பட்ட அல்லது அறுபதுக்கும் மேற்பட்ட கிளைகளைக் கொண்டது: அவற்றில் மேன்மையானது அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்பதை (முழுமையாக) ஏற்பதாகும். அவற்றில் தாழ்ந்தது, தொல்லை தரும் பொருளைப் பாதையிலிருந்து அகற்றுவதாகும். வெட்கமும் இறைநம்பிக்கையின் ஒரு கிளையாகும்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம் 58**

## தண்ணீர் புகட்டுங்கள்!

"இறைத்த தண்ணீரை உன்னுடைய வாளியிலிருந்து உன் சகோதரனின் வாளியில் ஊற்றுவதும் தர்மமாகும்'' என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: ஜாபிர்(ரலி), நூல்: முஸ்லிம்**

## கீழிருப்போரைப் பாருங்கள்!

வாழ்க்கையில் உங்களுக்குக் கீழிருப்போரைப் பாருங்கள்.

உங்களுக்கு மேலிருப்போரை பார்க்காதீர்கள். இறைவன் உங்கள் மீது புரிந்துள்ள அருட்கொடைகளை நீங்கள் சாதாரணமாகக் கருதாமலிருக்க அதுவே சரியானதாகும்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: புகாரீ, முஸ்லிம்**

## உயர்ந்த மனிதர்கள்

"1. நீதியுள்ள தலைவர்.

2. இறை வணக்கத்தில் மூழ்கியிருக்கும் இளைஞர்.

3. ஜமாஅத் தொழுகைக்காக இறை இல்லம் செல்ல விரும்பி அங்குச் செல்லும்வரை மனம் அமைதியுறாதவர்.

4. இறைவனுக்காக ஒருவரையொருவர் நேசிக்கும் இருவர். இவர்கள் சந்திப்பதாய் இருந்தாலும் அவனுக்காகவே சந்திக்கின்றனர். இவர்கள் பிரிவதாய் இருந்தாலும் அவனுக்காகவே பிரிகின்றனர்.

5. செல்வமும் அழகும் நிறைந்த ஒரு பெண் விபச்சாரத்திற்கு அழைத்தால், 'உறுதியாக நான் இறைவனை அஞ்சுகிறேன்' எனக் கூறியவர்.

6. தம் வலக்கை செய்த தர்மத்தை தம் இடக்கைக்குத் தெரியாமல் மறைத்து வாழ்பவர்.

7. தனிமையில் இருக்கும்போது இறைவனை நினைத்து தன் இரு கண்களிலும் கண்ணீர் வடித்தவர்' ஆகிய ஏழு நபர்களுக்கு நிழலே இல்லாத அந்த மறுமைநாளில் இறைவன் தன் நிழலை அளிப்பான்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: புகாரீ, முஸ்லிம்**

## வழிகாட்டுங்கள்!

"நேர்வழியில் செயல்படும் ஒருவருக்குக் கிடைக்கும் நன்மையைப் போன்றே அவரை அவ்வழியில் அழைத்தவருக்கும் நன்மை கிடைக்கும். ஆனால், இவர்கள் இருவரில் யாருடைய நன்மையும் யாருக்காகவும் குறைக்கப்படாது.

ஒரு தீமையைச் செய்பவருக்குக் கிடைக்கும் கூலி போன்றே

அவரை அந்த வழியில் அழைத்தவருக்கும் தீமை கிடைக்கும். இவ்விருவரில் யாருக்காகவும் யாரின் தீமையும் குறைக்கப்படாது" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம், மாலிக், அபூ தாவூத்**

## நல்லது எது? பாவம் எது?

நல்லவை மற்றும் பாவம் குறித்து இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் நான் கேட்டேன்.

"நற்குணமே, நற்செயல் மற்றும் நன்மையாகும். உன் உள்ளத்தில் நெருடலை ஏற்படுத்துவதும், உன் செயல்கள் குறித்து மக்கள் அறிந்துகொள்வதை நீ விரும்பாமல் இருப்பதுமே பாவமாகும்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: நவாஸ் இப்னு ஸம்ஆன்(ரலி), நூல்: முஸ்லிம்**

## நண்பரைத் தவிர்த்து ரகசியம் பேசாதீர்!

"மூன்றுபேர் ஒன்றாக இருக்கும்போது இருவர் மட்டும் இரகசியம் பேசாதீர்கள்! ஏனெனில், அது அவருக்கு வருத்தத்தை ஏற்படுத்தும்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: இப்னு மஸ்வூத்(ரலி), நூல்: புகாரீ, முஸ்லிம்**

## நோயாளிகளைச் சந்தியுங்கள்!

"ஆதமின் மகனே! நான் நோய்வாய்ப்பட்டிருந்தபோது நீர் என்னை நலம் விசாரிக்கவில்லையே' என மறுமையில் ஓர் அடியானிடம் இறைவன் கேட்பான்.

"இறைவா! உன்னை நான் எவ்விதம் நலம் விசாரிப்பது? நீயோ அகிலங்களைப் படைத்து, பரிபாலிப்பவனாயிற்றே' என அந்த அடியான் கூறுவான்.

"என்னுடைய இன்ன அடியான் நோய்வாய்ப்பட்டிருந்தான் என்பதை நீர் அறியமாட்டீரா? நீர் அவனை நலம் விசாரிக்க வில்லையே. நீர் அவனை நலம் விசாரித்திருந்தால் என்னை அவனிடம் கண்டிருப்பாய் என்பதை அறியமாட்டீரா?

"ஆதமின் மகனே! நான் உன்னிடம் உணவு கேட்டேன். ஆனால், நீர் எனக்கு உணவளிக்கவில்லையே?' என இறைவன் கேட்பான்.

“இறைவா! நான் எவ்விதம் உனக்கு உணவளிப்பது? நீயோ அகிலங்களைப் படைத்து உணவளிப்பவனாயிற்றே!’ என அந்த அடியான் கூறுவான்.

“என்னுடைய இன்ன அடியான் உன்னனிடம் உணவு கேட்டான். ஆனால், நீர் அவனுக்கு உணவளிக்கவில்லை. நீ அவனுக்கு உணவளித்திருந்தால் அதற்கான கூலியை என்னிடம் பெற்றிருப்பீர் என்பதை நீர் அறியமாட்டீரா?

‘‘ஆதமின் மகனே! நான் உன்னிடம் தண்ணீர் தருமாறு வேண்டினேன். நீர் எனக்குத் தண்ணீர் தரவில்லையே’ என இறைவன் கேட்பான்.

“இறைவா! நான் எவ்விதம் உனக்குத் தண்ணீர் புகட்டுவது? நீயோ அகிலங்களைப் படைத்து, உணவளித்து பரிபாலிப்பவனாயிற்றே!’ என அந்த அடியான் கூறுவான்.

‘‘நிச்சயமாக, என்னுடைய இன்ன அடியான், உம்மிடம் தண்ணீர் தருமாறு வேண்டினான். ஆனால் நீர் அவனுக்கு தண்ணீர் அளிக்கவில்லையே. நீ அவனுக்குத் தண்ணீர் அளித்திருந்தால் அதனை என்னிடம் பெற்றிருப்பாய் என்பதை அறிந்துகொள்’ என்று இறைவன் கூறுவான் என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம்**

## மரம் நடுங்கள்! அதுவும் தர்மம்

“முஸ்லிமாக - இறைவனுக்கு மட்டுமே கட்டுப்பட்டவராக இருப்பவர், ஒரு மரம் நட்டு அல்லது விவசாயம் செய்து அவற்றிலிருந்து பறவைகளோ, மனிதர்களோ, கால்நடைகளோ சாப்பிட்டால் அதுவும் அவர் செய்த தர்மமாக ஆகிவிடுகிறது” என்று இறைத்தூதர்(ஸல்) கூறினார்.

**அறிவித்தவர்: அனஸ்(ரலி), நூல்: புகாரீ, முஸ்லிம் மற்றும் திர்மிதீ.**

## அடிமைகளை உரிமை விடுங்கள்!

“அமைதியை நாடும் முஸ்லிமான - இறைவனுக்கு மட்டும் கட்டுப்படும் ஓர் அடிமையை ஒருவர் விடுதலை செய்தால் அவரின் ஒவ்வோர் உறுப்பையும் அந்த அடிமையின்

ஒவ்வோர் உறுப்புக்கும் பகரமாக அல்லாஹ் நரகத்திலிருந்து காப்பாற்றிவிடுகிறான்' என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: புகாரீ, முஸ்லிம்**

## அடிமைகளும் உங்கள் சகோதரர்களே!

"அடிமையிடம் தீயமுறையில் நடந்து கொண்டவர் சுவர்க்கம் புகமாட்டார்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அபூ பக்ர்(ரலி), நூல்: திர்மிதீ**

"அடிமையிடம் நன்முறையில் நடந்துகொள்வது செல்வத்தை அதிகரிக்கும் அல்லது அபிவிருத்தியை உண்டாக்கும்; தீய முறையில் நடந்துகொள்வது அபிவிருத்தியைத் தடுத்துவிடும்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: ராஃபிவு இப்னு முகைஸ்(ரலி), நூல்: அபூ தாவூத்**

"அபூ தர்(ரலி) அவர்களும், அவர்களின் அடிமையும் புத்தாடை அணிந்திருப்பதைக் கண்ட நான், இது குறித்து அவரிடம் வினவினேன்.

"அடிமைகள் உங்கள் சகோதரர்கள், பணியாட்கள். அல்லாஹ் அவர்களை உங்கள் பொறுப்பில் விட்டுள்ளான். எனவே, ஒருவர் தன் சகோதரருக்கு தாம் உண்பதிலிருந்து உண்ணக் கொடுக்கட்டும். தாம் அணியும் ஆடைகளைப்போல் அவருக்கும் அணியக் கொடுக்கட்டும். அவர்களின் ஆற்றலுக்கு அப்பாற் பட்ட செயல்களைச் செய்யுமாறு அவர்களைத் துன்பத்திற்கு உள்ளாக்காதீர்கள். அவர்களைச் சிரமமான வேலையைச் செய்யுமாறு ஏவினால் நீங்களும் அவர்களுக்கு அதில் உதவியாக இருங்கள்' என்று இறைத்தூதர்(ஸல்) கூறியதை நான் கேட்டேன்'' என அபூ தர்(ரலி) கூறினார்.

**அறிவித்தவர்: மஃரூர் இப்னு ஸுவைத்(ரலி), நூல்: புகாரீ, முஸ்லிம்**

## அடிமைகளின் தவறுகளை மன்னித்தல்

"இறைத்தூதர் அவர்களே! ஒரு பணியாளரை எத்தனை முறைதான் மன்னிப்பது?' என ஒருவர் இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் கேட்டார்.

அதற்கு ஒருவர் இறைத்தூதர்(ஸல்) மௌனமாக இருந்தார்கள்.

*பின்னர் அவர், "இறைத்தூதர் அவர்களே! ஒரு பணியாளரை எத்தனை முறைதான் மன்னிப்பது?' என மீண்டும் கேட்டார்.*

*அப்போதும் இறைத்தூதர்(ஸல்) மௌனமாகவே இருந்தார்கள். மீண்டும் அவர், "இறைத்தூதர் அவர்களே! ஒரு பணியாளரை எத்தனை முறைதான் மன்னிப்பது?" எனக் கேட்டார்.*

*"ஒவ்வொரு நாளும் அவரை 70 தடவை மன்னித்து வாரும்" என்றார்கள்.*

***அறிவித்தவர்: இப்னு உமர்(ரலி), நூல்: அபூ தாவூத், திர்மிதீ***

## *பணியாளையும் உண்ணச் செய்யுங்கள்!*

*"உங்களில் ஒருவருக்கான உணவை அவரின் பணியாள் கொண்டு வரும்போது அவரை உங்களுடன் அமர வைக்க இயலாவிட்டாலும், அவருக்கு ஒரு கவளம் உணவு அளியுங்கள். ஏனெனில், அவர் அதைச் சமைப்பதற்கும், அதன் சூட்டிற்கும் ஆளாகி இருக்கிறார்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: புகாரீ, அபூ தாவூத்,***

## *பணியாளை அடிக்காதீர்!*

*"உங்களில் ஒருவருக்கு தம் பணியாளை அடிக்க நேரிட்டால் அவர் இறைவனின் பெயர் கூறினால் அவரை விட்டும் உங்கள் கையைத் தடுத்துக் கொள்ளுங்கள்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: அபூ ஸயீதில் குத்ரீ(ரலி), நூல்: திர்மிதீ***

## *அடிமைகளை அடிக்காதீர்!*

*நான் ஒரு முறை என் அடிமையைச் சாட்டையால் அடித்துக் கொண்டிருந்தேன்.*

*"அபூ மஸ்வூதே! எச்சரிக்கை!" என்ற ஒரு சப்தத்தை எனக்குப் பின்புறமிருந்து செவியுற்றேன். ஆனால், நான் சினமுற்றிருந்த தால் அது யாருடைய சப்தம் என்பதை என்னால் விளங்கிக் கொள்ள இயலவில்லை.*

*பின்னரும், "அபூ மஸ்வூதே! எச்சரிக்கை!" என்ற அதே சப்தம் எனக்கருகில் ஒலித்தது. அவ்வாறு எச்சரித்தவர் இறைத்தூதர்*

தாம் என்பதை நான் அறிந்தேன். உடனே என் கையிலிருந்த சாட்டையைக் கீழே போட்டுவிட்டேன்.

“எச்சரிக்கை அபூ மஸ்வூதே! நீர் இந்த அடிமையின் மீது வல்லமை பெற்றிருப்பதைவிட உம் மீது இறைவன் மிக அதிகமான வல்லமையைப் பெற்றுள்ளான்” என அவர்கள் கூறினர்.

எனவே, நான் “இனி ஒருபோதும் அடிமைகளை அடிப்பதில்லை” என என் மனத்தினுள் கூறிக்கொண்டேன்.

**அறிவித்தவர்: அபூ மஸ்வூத் அல் பத்ரீ(ரலி), நூல்: முஸ்லிம், அபூ தாவூத்**

## அடிமைகள் மீது அவதூறு கூறாதீர்!

“குற்றமற்ற அடிமைகளின் மீது அவதூறு கூறியவன், மறுமை நாளில் சவுக்கால் அடிக்கப்படுவான்…” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: புகாரீ, முஸ்லிம், அபூ தாவூத்**

## அடிமை எனக் குறிக்காதீர்!

“என் அடிமை, என் அடிமை’ என உங்களில் ஒருவர் தம் அடிமையைக் கூறவேண்டாம். அவ்வாறே, ‘என் எஜமான்; என் எஜமானி என தங்களை விலை கொடுத்து வாங்கியவரை அடிமைகளும் கூறவேண்டாம்.

விலை கொடுத்து வாங்கியவர் தன் அடிமையை ‘என் வாலிபன்’ என்றோ, ‘என் வாலிபப்பெண்’ என்றோ கூறட்டும். அவ்வாறே, தங்களை விலை கொடுத்து வாங்கியவரை ‘என் தலைவர்’ என்றோ, ‘என் தலைவி என்றோ அடிமைகள் கூறட்டும். ஏனெனில், நிச்சயமாக நீங்கள் அனைவரும் அடிமைகளே. அல்லாஹ்தான் எஜமானன்’’ என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: புகாரீ, முஸ்லிம்**

## அடிமைகளை விடுதலை செய்யுங்கள்!

ஒருவர் இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் வந்தார்.

“இறைத்தூதர் அவர்களே! நான் அழிந்துவிட்டேன்” என அவர் கூறினார்.

“எது உன்னை அழித்தது?” என இறைத்தூதர்(ஸல்) கேட்டார்கள்.

“ரமளானில் நோன்பு நோற்ற நிலையில் நான் என் மனைவியுடன் பாலுறவு கொண்டுவிட்டேன்” என அவர் கூறினார்.

“உன்னால் ஓர் அடிமையை விடுதலை செய்ய இயலுமா?” என இறைத்தூதர்(ஸல்) கேட்டார்கள்.

“இயலாது” என அவர் பதில் கூறினார்.

“அப்படியானால், அறுபது ஏழைகளுக்கு உணவளிக்க இயலுமா?” என அவர்கள் கேட்டார்கள்.

“இயலாது” என அவர் கூறினார்.

பின்னர், பரிகாரம் வேண்டியவராக அங்கேயே அமர்ந்திருந்தார். அப்போது, இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் ஒரு தட்டு கொடுக்கப்பட்டது. அதில் பேரீச்சம் பழங்கள் இருந்தன. இறைத்தூதர்(ஸல்) அதை அவரிடம் கொடுத்து, “இதை தர்மம் செய்வீராக!” எனக் கூறினார்கள்.

“எங்களைவிட ஏழைகளுக்கா இதைத் தர்மம் செய்யவேண்டும்? இந்த மதீனாவில் எங்களைவிட ஏழைகள் யாரும் இல்லையே?” என அவர் கூறினார்.

இதைக் கேட்ட இறைத்தூதர்(ஸல்) தம் கடைவாய்ப் பற்கள் தெரியுமளவிற்குச் சிரித்தார்கள்.

“செல்! உம் குடும்பத்தாருக்கு இதைக் கொடுத்துவிடு!” என கூறினார்கள்.

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), புகாரீ, முஸ்லிம்**

## உட்கார்ந்திருப்பவரை விரட்டாதீர்!

“ஒருவர் அமர்ந்திருக்கும் இடத்தில் நீங்கள் அமர்வதற்காக அவரை அந்த இடத்தை விட்டு எழுப்பாதீர்கள். மாறாக, சிறிது இடம் விட்டு விசாலமாக்கிக் கொள்ளுங்கள்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: இப்னு உமர்(ரலி), நூல்: புகாரீ, முஸ்லிம்**

## நின்று கொண்டு குடிக்காதீர்!

“உட்காருவதற்கு வசதியாக இருக்கும்போது உங்களில் யாரும் நின்றுகொண்டு குடிக்க வேண்டாம்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள். **அறிவித்தவர்: அலீ(ரலி), நூல்: முஸ்லிம்**

## காலணியை முறையாக...

“உங்களில் ஒருவர் காலணியை அணிந்தால் தம் வலக் காலில் முதலில் அணியட்டும்.” பின்னர் அதைக் கழற்றும்போது இடக் காலிலிருந்து முதலில் கழற்றட்டும்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள். **அறிவித்தவர்: அலீ(ரலி), நூல்: முஸ்லிம்**

## ஒற்றைக்காலில் செருப்பணியாதீர்!

“உங்களில் ஒருவர் ஒரு காலில் மட்டும் செருப்பணிந்து நடக்க வேண்டாம். இரண்டு கால்களிலும் செருப்பணிந்து நடக்கட்டும். அல்லது இரண்டையும் கழற்றிவிடட்டும்” என இறைத்தூதர் (ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அலீ(ரலி), நூல்: புகாரீ, முஸ்லிம்**

## பெருமையடிக்காதீர்!

“பெருமையடித்தவனாக தன்னுடைய ஆடையை பூமியில் பரவவிட்டு நடப்பவனை இறைவன் ஏறெடுத்துப் பார்க்க மாட்டான்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: இப்னு உமர்(ரலி), நூல்: புகாரீ, முஸ்லிம்**

## வலக்கரத்தால் சாப்பிடுங்கள்!

“நீங்கள் சாப்பிடும்போது வலக்கரத்தால் சாப்பிடுங்கள்! குடிக்கும்போது வலக்கையால் குடியுங்கள்! ஏனெனில், நிச்சயமாக ஷைத்தான் தன் இடக்கையால் சாப்பிடுகிறான். மேலும், தன் இடக்கரத்தால் குடிக்கிறான்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள். **அறிவித்தவர்: இப்னு உமர்(ரலி), நூல்: முஸ்லிம்**

## வீண்விரையம் செய்யாதீர்!

“வீண் விரயம் மற்றும் பெருமையின்றி சாப்பிடுங்கள்; குடியுங்கள்; உடுத்துங்கள்!” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அம்ர் இப்னு ஷுஐபு(ரலி), அபூ தாவூத், அஹ்மத்**

## உறவைப் பேணி வாழுங்கள்!

“தன்னுடைய உணவில் அபிவிருத்தியையும், தனக்கு நீண்ட ஆயுளையும் விரும்புகின்றவர் தன் உறவினர்களுடன் உறவை வலுப்படுத்தட்டும்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: புகாரீ**

“உறவுகளைத் துண்டிப்பவன் சுவர்க்கம் புகமாட்டான்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: ஜுபைர் இப்னு முத்யிம்(ரலி), நூல்: புகாரீ, முஸ்லிம்**

## இறைவன் தடுத்ததைச் செய்யாதீர்!

“தாய்மார்களைத் துன்புறுத்துதல், பெண் பிள்ளைகளை உயிருடன் புதைத்தல், கடமைகளை நிறைவேற்றாமல் வாழ்தல், பிறர் செல்வத்தை அபகரித்தல், வீண்பேச்சு பேசுதல், அதிகமாக வினாக்கள் எழுப்புதல் மற்றும் சொத்துக்களை வீணடித்தல் முதலியவற்றை இறைவன் உங்களுக்குத் தடுத்துள்ளான்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: முகீரா இப்னு ஷுஅபா(ரலி), நூல்: புகாரீ, முஸ்லிம்**

## பெற்றோரின் மகிழ்ச்சியில்...

“இறைவனின் மகிழ்ச்சி, பெற்றோரின் மகிழ்ச்சியில் உள்ளது. இறைவனின் கோபம், பெற்றோரின் கோபத்தில் உள்ளது” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னு ஆஸ்(ரலி), நூல்: திர்மிதீ**

## அண்டை வீட்டாரின் உரிமைகளை அளியுங்கள்!

“என் உயிரைத் தன் கையில் வைத்திருப்பவன் மீது ஆணையாக, ஒருவர் தனக்கு விரும்புவதையே தன் அண்டை வீட்டாருக்கும் விரும்பவேண்டும். அப்போதுதான் அவர் இறைநம்பிக்கையாளர் ஆவார்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அனஸ்(ரலி), நூல்: புகாரீ, முஸ்லிம்**

“நீ நல்ல குழம்பு வைத்தால் அதில் தண்ணீரை அதிகமாக்கி உன் அண்டை வீட்டாருக்கும் கொடு!” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள் **அறிவித்தவர்: அபூ தர்(ரலி), நூல்: முஸ்லிம்**

## பெரும் பாவம்

*“மிகப்பெரிய பாவம் எது?” என இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் நான் கேட்டேன்.*

*“இறைவன் உன்னைப் படைத்திருக்க, நீ அவனுக்கு இணை வைப்பது” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

*“அதன் பின்னர் பெரிய பாவம் எது?” என நான் கேட்டேன்.*

*“உன் குழந்தை உன் உணவில் பங்குபோடும் என்ற அச்சத்தில் அதை நீ கொல்வது” என்றார்கள்.*

*“அதன் பின்னர் பெரிய பாவம் எது?” என நான் கேட்டேன்.*

*“உன் அண்டை வீட்டானின் மனைவியுடன் விபச்சாரம் செய்வது” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: இப்னு மஸ்வூத்(ரலி), நூல்: புகாரீ, முஸ்லிம்***

## பெற்றோரைத் திட்டாதீர்!

*ஒருவன் தன் பெற்றோரைத் திட்டுவது பெரும் பாவங்களில் ஒன்றாகும்” என்று இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

*மனிதன் தன் பெற்றோரைத் திட்டுவானா?” என இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டது.*

*“ஆம்! ஒருவன் மற்றவரின் தந்தையைத் திட்டுகிறான் என்றால் பதிலுக்கு அவன் இவனுடைய தந்தையைத் திட்டுகிறான். அவ்வாறே ஒருவன் மற்றவரின் தாயைத் திட்டுகிறான் என்றால் பதிலுக்கு அவன் இவனுடைய தாயைத் திட்டுகிறான்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னு அல் ஆஸ்(ரலி), நூல்: புகாரீ, முஸ்லிம்***

## நற்செயல்கள் ஒவ்வொன்றும் தர்மம்!

*“நல்ல காரியம் ஒவ்வொன்றும் தர்மம் ஆகும்” என இறைத்தூதர் (ஸல்) கூறினார்கள்.* ***அறிவித்தவர்: ஜாபிர்(ரலி), நூல்: புகாரீ***

## சிரித்த முகத்துடன் இருங்கள்!

*“நல்ல காரியம் எதையுமே இழிவாகக் கருதாதே! நீ உன் சகோதரனைச் சிரித்த முகத்துடன் சந்தித்தால் அதுவும் நல்ல*

*காரியமே!" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

**அறிவித்தவர்: அபூ தர்(ரலி), நூல்: முஸ்லிம்**

## பாதுகாப்பளியுங்கள்!

*"இறைவனின் பெயரால் உங்களிடம் பாதுகாப்புக் கோருபவருக்கு பாதுகாப்பு அளியுங்கள்.*

*இறைவனின் பெயரால் தன் தேவையைக் கேட்கிறவருக்குக் கொடுங்கள்.*

*உங்களுக்கு நன்மை செய்கிறவருக்கு நீங்களும் நன்மை செய்யுங்கள்! உங்களிடம் எதுவுமே இல்லையெனில், குறைந்த பட்சம் அவருக்காக இறைவனிடம் பிரார்த்தியுங்கள்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

**அறிவித்தவர்: இப்னு உமர்(ரலி), நூல்: பைஹகீ**

## பொருளுக்கு அடிமையாகாதீர்!

*"தங்கம், வெள்ளி மற்றும் பட்டு முதலியவற்றுக்கு அடிமைப் பட்டிருப்போர் நாசமாகட்டும்! ஏனெனில், இப்படிப்பட்டவனுக்கு பொருள் கொடுக்கப்பட்டால் மகிழ்ச்சியடைகிறான். இல்லையெனில் அதிருப்தியடைகிறான்" என இறைத்தூதர் (ஸல்) கூறினார்கள்.*

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: புகாரீ**

## வழிப்போக்கன் போல இருங்கள்!

*"நீங்கள் உலகில் ஒரு வழிப்போக்கன் போன்றே இருங்கள்! இந்த உலகமே நிலையானது எனக் கருதாதீர்கள்!" என்று இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள் என இப்னு உமர் அறிவித்தார்.*

*"நீங்கள் மாலைப்பொழுதை அடைந்தால் காலைப் பொழுதை எதிர்ப் பார்க்காதீர்கள்! அவ்வாறே நீங்கள் காலைப் பொழுதை அடைந்துவிட்டால் மாலைப் பொழுதை எதிர்பார்க்காதீர்கள்!*

*நீங்கள் ஆரோக்கியமாக இருக்கும் போதே நோய்க் காலத்திற்காக எதையாவது தேடிக்கொள்ளுங்கள்! நீங்கள் உயிர் வாழும் போதே உங்களின் மரணத்திற்குப் பிந்தைய வாழ்க்கைக்காக எதையாவது தேடிக்கொள்ளுங்கள்!" என இப்னு உமர் கூறிவந்தார்.*

**நூல்: புகாரீ**

## இறைவனிடமே உதவி தேடுங்கள்!

*“நீங்கள் இறைவனின் கட்டளைகளை மனத்தில் வையுங்கள்! அவன் உங்களைப் பாதுகாப்பான். உங்கள் கவனத்தை இறைவனின் பக்கம் செலுத்துங்கள்! அவனை உங்களுக்கு முன்பாகக் காண்பீர்கள்! நீங்கள் எதையேனும் கேட்டால், இறைவனிடம் மட்டுமே கேளுங்கள்! நீங்கள் உதவி தேடினால் இறைவனிடம் மட்டுமே உதவி தேடுங்கள்!” என இறைத் தூதர்(ஸல்) கூறினார்கள்.*

**அறிவித்தவர்: இப்னு அப்பாஸ்(ரலி), நூல்: திர்மிதீ**

## உங்களை நேசிக்க வேண்டுமா?

*“எனக்கு ஒரு செயலைக் காட்டுங்கள்! நான் அதைச் செய்தால் இறைவனும் என்னை நேசிக்க வேண்டும்; மக்களும் என்னை நேசிக்க வேண்டும்” என இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் ஒருவர் கேட்டார்.*

*“உலக மோகத்தைக் குறைத்துக் கொள்! இறைவன் உன்னை நேசிப்பான். மக்களிடம் உள்ளவற்றின் மீது உன் மோகத்தைக் குறைத்துக் கொள்! மக்கள் உன்னை நேசிப்பார்கள்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

**அறிவித்தவர்: ஸஹ்ல் இப்னு ஸஅத்(ரலி), நூல்: இப்னு மாஜா**

## அந்தரங்கத்திலும் சிறந்து வாழுங்கள்!

*“மக்களிடமிருந்து தன் தேவைகளை எதிர்பார்க்காமல், அந்தரங்க வாழ்க்கையில் சிறந்தவனாக வாழும் அடியானை இறைவன் நேசிக்கின்றான்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

**அறிவித்தவர்: ஸஅத் இப்னு அபீ வக்காஸ்(ரலி), நூல்: முஸ்லிம்**

## வயிறு ஒரு தீய பாத்திரம்

*“தன் வயிற்றைவிட ஒரு தீய பாத்திரத்தை மனிதன் அதிகமாக நிரப்புவதில்லை” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

**அறிவித்தவர்: மிக்தாம் இப்னு மஅதி யக்ரப்(ரலி), நூல்: திர்மிதீ**

## தவறிழைப்பவனே மனிதன்!

*“மனிதர்கள் அனைவரும் தவறு செய்யக் கூடியவர்களே!*

அவர்களில் சிறந்தவர்கள் தம் பாவங்களுக்காக மனம் வருந்தி திருந்துபவர்களே” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அனஸ்(ரலி), நூல்: திர்மிதீ, இப்னு மாஜா**

## வரம்பு மீறிப் புகழாதீர்!

ஒரு மனிதர் குறித்து இறைத்தூதர்(ஸல்) அவர்களுக்கு அருகில் பேசப்பட்டபோது ஒருவர் அவர் குறித்து புகழ்ந்துரைத்தார். உடனே, “உனக்குக் கேடுதான். உம் தோழரின் கழுத்தை நீர் துண்டித்து விட்டீரே!” என இறைத்தூதர்(ஸல்) பல முறை கூறினார்கள். பிறகு,

“உங்களில் ஒருவர் (தம் சகோதரரைப்) புகழ்ந்தேயாக வேண்டும் என்றிருந்தால், ‘(அவர் குறித்து) நான் இன்னின்ன விதமாக எண்ணுகிறேன்’ என்று (மட்டும்) கூறட்டும்! அதுவும் அவர் அவ்வாறு இருப்பதாகக் கருதினால் மட்டுமே கூறட்டும்! அல்லாஹ்வே அவரைக் குறித்து விசாரணை (செய்து முடிவு) செய்பவனாய் இருக்கிறான். அல்லாஹ்வை முந்திக் கொண்டு யாரையும் தூய்மையானவர் என்று (யாரும்) கூற வேண்டாம்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

மற்றோர் அறிவிப்பில்,“(தம்முன்புகழ்ந்தவரைப் பார்த்து) உனக்கு அழிவுதான்’’ என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள் என உள்ளது. **அறிவித்தவர்: அபூ பக்ரா(ரலி), நூல்: புகாரீ 6061**

## உண்மையில் நிலைத்திருங்கள்!

உண்மையில் நிலைத்திருங்கள்! ஏனெனில், உண்மை நன்மையின் பக்கம் கொண்டு செல்கிறது. நன்மை, சுவர்க்கத்திற்குக் கொண்டு செல்கிறது. மனிதன் எப் போதும் உண்மையையே பேசிக்கொண்டு உண்மையைத் தேடிக்கொண்டே இருந்தால், அவனை உண்மையாளர்களில் ஒருவனாகவே இறைவன் எழுதுகிறான்.

பொய்யுரைப்பது குறித்து உங்களை நான் எச்சரிக்கிறேன். ஏனெனில், பொய் தீயவழியில் கொண்டு செல்கிறது. மேலும், தீயவழி நரகத்திற்குக் கொண்டு செல்கிறது. மனிதன் எப்போதும் பொய்யே பேசிக்கொண்டு பொய்யின் தேட்டத்திலேயே இருந்தால், அவனைப் பொய்யர்களில் ஒருவனாகவே இறைவன்

எழுதுகிறான்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: இப்னு மஸ்வூத்(ரலி) நூல்:புகாரீ 6094, முஸ்லிம்**

## பிறர் சிரிக்கக்கூட பொய்யுரைக்காதீர்!

“மக்களைச் சிரிக்க வைப்பதற்காகப் பொய் சொல்பவனுக்குக் கேடுதான். அவனுக்குக் கேடுதான். அவனுக்கு கேடு தான்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: பஹ்ஜ் இப்னு ஹகீம்(ரலி), நூல்: அபூ தாவூத், நஸயீ**

## நிதானமாகப் பேசுங்கள்!

“இறைத்தூதர்(ஸல்) ஒரு விஷயத்தை பேசியபோது எண்ணக் கூடிய ஒருவர் எண்ணியிருந்தால், ஒன்றுவிடாமல் எண்ணி இருக்கலாம்.(அந்த அளவிற்கு நிறுத்தி, நிதானமாக, தெளிவாய் அவர்கள் பேசிவந்தார்கள்.)”

**அறிவித்தவர்: ஆயிஷா(ரலி), நூல்: புகாரீ 3567**

இறைத்தூதர்(ஸல்) ஏதாவது ஒரு வார்த்தை பேசினால் அது அவர்களிடமிருந்து நன்கு புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்பதற்காக மும்முறை அதைத் திரும்பத் திரும்பக் கூறுவார்கள். ஏதாவது ஒரு சமூகத்தாரிடம் சென்றால் மும்முறை ஸலாம் கூறுவார்கள்” **அறிவித்தவர்: அனஸ்(ரலி), நூல்: புகாரீ 95**

## குத்திக்காட்டாதீர்!

“இறைநம்பிக்கையாளன் குத்திப் பேசுபவனாகவும், சதா சாபமிடுபவனாகவும் இருக்கமாட்டான்; மானங்கெட்ட செயல் புரிபவனாகவும், தீய வார்த்தைகள் பேசுபவனாகவும் இருக்க மாட்டான்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அபூ தர்தா(ரலி), நூல்: ஹாகிம்**

## பிறர் குறையை மறைத்திடுங்கள்!

“ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமின் சகோதரன் ஆவான். அவனுக்கு அநீதியிழைக்கவும் மாட்டான்; அவனை (பிறரின் அநீதிக்கு ஆளாகும்படி) கைவிடவும் மாட்டான். தன் சகோதரனின் தேவையை நிறைவு செய்வதில் ஈடுபட்டிருக் கிறவரின் தேவையை நிறைவு செய்வதில் அல்லாஹ்வும் ஈடுபட்டிருக்கிறான். ஒரு முஸ்லிமின் ஒரு துன்பத்தை

*நீக்குகிறவரைவிட்டு அல்லாஹ்வும் மறுமை நாளின் துன்பங்களில் ஒரு துன்பத்தை நீக்குகிறான். ஒரு முஸ்லிமின் குறையை மறைக்கிறவரின் குறையினை மறுமை நாளில் அல்லாஹ்வும் மறைக்கிறான்'' என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.* ***அறிவித்தவர்: இப்னு உமர்(ரலி), நூல்: புகாரீ 2442***

## சுயபரிசோதனை

*"மக்களின் குறைகளை விட்டுவிட்டுத் தம் குறைகளைக் காண் கிறவருக்கு 'தூபா' எனும் நிழல் தரும் மரம் (சுவர்க்கத்தில்) உண்டு" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: அனஸ்(ரலி), நூல்: பஸ்ஸார்***

## பெருமையடிக்காதீர்!

*"உண்ணுங்கள்; பருகுங்கள்; உடுத்துங்கள்; தர்மம் செய்யுங்கள்; வீண்விரயம் செய்யாதீர்கள்; தற்பெருமை கொள்ளாதீர்கள்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

*"விரயம் அல்லது தற்பெருமை ஆகிய இரண்டும் உன்னை அண்டாத வரை நீ விரும்பியதை உண்ணலாம்; நீ விரும்பியதை உடுத்தலாம்" என இப்னு அப்பாஸ்(ரலி) கூறினார்.*

***நூல்: புகாரீ***

*பெருமைக்காரனுக்கு நரகம்தான் கதி என்பதை அறிந்து கொள்ளுங்கள். பெருமைக்காரனை நரகம் தன்னுள் வைத்துக் கொள்வதை பெருமையாகக் கருதுகிறது.*

*"சுவர்க்கமும் நரகமும் வாக்குவாதம் செய்துகொண்டன.*

*''பெருமை அடிப்பவர்களுக்காகவும் அக்கிரமக்காரர் களுக்காகவும் நான் சொந்தமாய் ஆக்கப்பட்டுள்ளேன்" என நரகம் சொன்னது.*

*''எனக்கு என்ன நேர்ந்ததோ! மக்களில் பலவீனர்களும் அவர்களில் கீழ்நிலையினருமே (அதிகமாக) என்னுள் நுழைகிறார்கள்" என சுவர்க்கம் கூறியது.*

*"நீ என் அருள். உன் மூலமே என் அடியார்களில் நான் நாடிய சிலருக்கு அருள் புரிகிறேன்" என அல்லாஹ் சுவர்க்கத்திடம் கூறினான்.*

“நீ வேதனை(க்காகத்) தான். உன் மூலமே என் அடியார்களில் நான் நாடிய சிலருக்கு வேதனை கொடுக்கிறேன்'' என அல்லாஹ் நரகத்திடம் கூறினான்.

அவ்விரண்டில் ஒவ்வொன்றும் வயிறு நிரம்பத் தரப்படும். ஆனால், நரகமோ இறைவன் தன் காலை அதன் மீது வைக்கும் வரை வயிறு நிரம்பாது. இறைவன் காலை வைக்கும்போது “போதும்! போதும்!” எனக் கூறும். அப்போதுதான் அதற்கு வயிறு நிரம்பும்.மேலும், அதில் ஒரு பகுதி மற்றொரு பகுதியுடன் இணைக்கப்படும்.

அல்லாஹ் தன் படைப்புகளில் யாருக்கும் அநியாயம் செய்ய மாட்டான். ஆனால், வல்லவனும் மாண்புடை யோனுமான அல்லாஹ், சுவர்க்கத்திற்கு என்றே (புதிதாகச்) சிலரைப் படைப்பான்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**நூல்: புகாரீ 4850.**

“தன் இதயத்தில் அணுவளவு பெருமையை வைத்திருப்பவர் சுவர்க்கம் புகமாட்டார்...” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: இப்னு மஸ்வூத்(ரலி), நூல்: முஸ்லிம் 91**

“ஒரு மனிதன் தன் கீழாடையை தற்பெருமையினால் (தரையில்) இழுத்துக் கொண்டே நடந்தபோது, அவன் (பூமியில்) புதைந்து போகும்படி செய்யப்பட்டான். அவன் மறுமை நாள் வரை பூமிக்குள் அழுந்திச் சென்று கொண்டேயிருப்பான்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: இப்னு உமர்(ரலி), நூல்: புகாரீ 3485**

## கண்ணியம் காத்து வாருங்கள்!

‘துல்ஹஜ்’ மாதம் 10ஆம் நாள் இறைத்தூதர்(ஸல்) உரை நிகழ்த்தினார்கள். அப்போது,

“மக்களே! இது எந்நாள்?” எனக் கேட்டார்கள்.

“புனிதமிக்க தினம்” என மக்கள் கூறினார்கள்.

பிறகு, “இது எந்நகரம்?” என இறைத்தூதர்(ஸல்) கேட்டார்கள்.

“புனிதமிக்க நகரம்” என மக்கள் கூறினர்.

பிறகு, “இது எம்மாதம்?” எனக் கேட்டார்கள்.

“புனிதமிக்க மாதம்!” என மக்கள் கூறினர்.

*பிறகு, ‘‘நிச்சயமாய் இம்மாதத்தின் இந்நாள் எவ்வாறு உங்களுக்குப் புனிதம் பெற்றுள்ளதோ அவ்வாறே உங்கள் ஒவ்வொருவரின் உயிர்களும் உடைமைகளும் கண்ணியமும் உங்களுக்குப் புனிதமானவை!” என இறைத்தூதர்(ஸல்) பல முறை கூறினார்கள்.*

*பிறகு தலையை உயர்த்தி, “இறைவா! நான் (உன் மார்க்கத்தை மக்களிடம்) சேர்த்துவிட்டேனா? இறைவா! நான் (உன் மார்க்கத்தை மக்களிடம்) சேர்த்து விட்டேனா?” என்றும் கூறினார்கள்.*

*பிறகு “இங்கு வந்தவர்கள் வராதவர்களுக்கு அறிவித்து விடுங்கள்! என் மரணத்திற்குப் பின் நீங்கள் ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டு இறைமறுப்பாளர்களாய் ஆகிவிட வேண்டாம்!” என்றும் இறைத்தூதர்(ஸல்) எச்சரித்தார்கள்.*

**அறிவித்தவர்: இப்னு அப்பாஸ்(ரலி), நூல்: புகாரீ 1739, 1740**

## யார் வீரன்?

*“கோபத்தில் கொதிப்பவன் வீரனல்ல. மாறாக கோபமூட்டப் படும்போது தனக்குப் பலம் இருந்தும் தன்னைத்தானே அடக்கிக் கொள்பவனே வீரன்’’ என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: புகாரீ, முஸ்லிம்**

## அக்கிரமம் இழைக்காதீர்!

*“அக்கிரமம் இழைத்தவனுக்கு அவனுடைய அக்கிரமம் ஒரு நாள் பல இருள்களாக வந்து நிற்கும்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

**அறிவித்தவர்: இப்னு உமர்(ரலி), நூல்: புகாரீ, முஸ்லிம்**

## கஞ்சத்தனம் வேண்டாம்!

*“கஞ்சத்தனத்தை தவிர்த்துக் கொள்ளுங்கள்! ஏனெனில், அது உங்களுக்கு முன்பிருந்தோரை அழித்துவிட்டது” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

**அறிவித்தவர்: ஜாபிர்(ரலி), நூல்: முஸ்லிம்**

## பகட்டு வேண்டாம்!

*“பிறருக்குக் காட்டிக் கொள்வதற்காக வணக்கத்திலும், நற் செயல்களிலும் ஈடுபடுதல், சிறிய இணைவைப்பு (இறைவனுக் குச் செய்யும் துரோகம்) ஆகும். இதை இறைவன் மன்னிக்க மாட்டான்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

**அறிவித்தவர்: மஹ்மூத் இப்னு லபீத்(ரலி), நூல்: அஹ்மத்**

## நயவஞ்சகனின் அடையாளங்கள்

*“நயவஞ்சகனின் அடையாளங்கள் மூன்று 1. அவன் பேசினால் பொய்யே பேசுவான். 2. அவன் வாக்குறுதி கொடுத்தால் மாறு செய்வான். 3. அவனிடம் ஒரு பொருள் அல்லது பணி தொடர் பான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டால் அதில் மோசடி செய்வான்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: புகாரீ, முஸ்லிம்**

## வேண்டாம் சந்தேகம்!

*(ஆதாரமில்லாமல் பிறரை) சந்தேகிப்பது குறித்து உங்களை எச்சரிக்கிறேன். ஏனெனில், சந்தேகம் கொள்வது பெரும் பொய் யாகும். (பிறரின் குறையைத்) துருவித்துருவி ஆராயாதீர்கள்! (வாங்கும் எண்ணமின்றி பொருளின்) விலையை ஏற்றிக் கேட்காதீர்கள்! ஒருவருக்கொருவர் பொறாமை கொள்ளாதீர்! கோபம் கொள்ளாதீர்கள்! பிணங்கிக் கொள்ளாதீர்கள்! (மாறாக,) அல்லாஹ்வின் அடியார்களே! (அன்பு காட்டுவதில்) சகோதரர்களாய் இருங்கள்!” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: புகாரீ 6064, 6066**

## அரசாங்கப் பொறுப்பு

*“குடிமக்களைப் பராமரிக்கும் பொறுப்பை ஒருவரிடம் இறைவன் ஒப்படைத்திருக்க, தன் பிரஜைகளை மோசடி செய்த நிலையில் இறைவனை அவர் சந்தித்தால் அவருக்கு சுவர்க்கத்தை இறைவன் தடுத்துவிடுவான்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

**அறிவித்தவர்: மஅகல் இப்னு யஸ்ஸார்(ரலி), நூல்: புகாரீ, முஸ்லிம்**

## பொறுப்பில் பொறுப்பாய்!

*“இறைவா! ஒரு வேலைக்குப் பொறுப்பாளராக நியமிக்கப்*

பட்டவர் தன் பொறுப்பில் கவனமில்லாமல் அதில் கஷ்டத்தை ஏற்படுத்தினால், அவருக்கு நீ கஷ்டத்தை உண்டாக்குவாயாக!” என இறைத்தூதர்(ஸல்) பிரார்த்தித்து வந்தார்கள்.

**அறிவித்தவர்: ஆயிஷா(ரலி), நூல்: முஸ்லிம்**

## முகத்தில் அடிக்காதீர்!

“உங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டால் ஒருவர் மற்றவரின் முகத்தை சேதப்படுத்திவிட வேண்டாம்” என இறைத்தூதர் (ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: புகாரீ, முஸ்லிம்**

## பொது சொத்தில் நுழையாதீர்!

“இறைவனின் சொத்தில் அதாவது பொது சொத்தில் நியாய மின்றி நுழைகிறவர்களுக்கு மறுமையில் நரகம்தான் கதி” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: கவ்லா அன்ஸாரி(ரலி), நூல்: புகாரீ**

## அநியாயம் செய்யாதீர்!

“என் அடியார்களே! அநியாயத்தை எனக்கு நானே விலக்கிக் கொண்டேன். இன்னும் உங்களுக்கிடையேயும் அதை விலக்கி விட்டேன். எனவே, நீங்கள் ஒருவருக்கொருவர் அநியாயம் செய்யாதீர்கள்!’ என இறைவன் கூறுகிறான்” என்று இறைத் தூதர் (ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அபூ தர்(ரலி), நூல்: முஸ்லிம்**

## பாதுகாவல் தேடுங்கள்!

“இறைவா! தீய பழக்கங்களிலிருந்தும், தீய செயல்களிலிருந்தும், தீய இச்சைகளிலிருந்தும், இன்னும் கடும் நோய்களிலிருந்தும் என்னைக் காப்பாயாக!” என இறைத்தூதர்(ஸல்) இறைவனிடம் பிரார்த்தித்து வந்தார்கள்.

**அறிவித்தவர்: குத்பா இப்னு மாலிக்(ரலி), நூல்: திர்மிதீ**

## திட்டித் தீர்க்காதீர்!

“ஒருவரையொருவர் திட்டிக் கொள்ளும் இருவரில் திட்ட ஆரம்பித்தவரையே அதன் பாவம் சாரும். இது எதுவரை

*எனில், அநியாயம் செய்யப்பட்டவர் வரம்பு மீறாதவரை” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம்***

## தீங்கிழைக்காதீர்!

*“பிறருக்குத் தீங்கிழைப்பவனுக்கு இறைவன் தீங்கிழைப்பான். பிறரைத் துன்பத்தில் ஆழ்த்துபவனை இறைவன் துன்பத்தில் ஆழ்த்துவான்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: அபூ ஸிர்மா(ரலி), நூல்: அபூ தாவூத், திர்மிதீ***

## இறந்தவர்களை ஏசாதீர்!

*“இறந்தவர்களை ஏசாதீர்கள். ஏனெனில், அவர்கள் தங்களின் செய்கையின்பால் சென்றுவிட்டார்கள்” என இறைத்தூதர் (ஸல்) கூறினார்கள்.* ***அறிவித்தவர்: ஆயிஷா(ரலி), நூல்: புகாரீ***

## புறம் பேசாதீர்!

*“புறம் பேசுபவன் சுவர்க்கத்தில் நுழையமுடியாது” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: ஹுதைஃபா(ரலி), நூல்: புகாரீ, முஸ்லிம்***

## கோபம் கொள்ளாதீர்!

*“தன் கோபத்தை கட்டுப்படுத்திக் கொள்கிறவருக்கு இறைவன் தன் தண்டனையைத் தடுத்துவிடுகிறான்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.* ***அறிவித்தவர்: அனஸ்(ரலி), நூல்: தப்ரானி***

## அவசரப்படாதீர்!

*“அவசரப்படுவது ஷைத்தானின் செயல்களில் ஒன்று” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: ஸஹ்ல் இப்னு ஸஅத்(ரலி), நூல்: திர்மிதீ***

## சபிக்காதீர்!

*“பிறரைச் சபித்துக் கொண்டே இருப்பவர்கள் மறுமை நாளில் பரிந்துரை செய்பவர்களாகவோ, சாட்சி சொல்பவர்களாகவோ இருக்கமுடியாது” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: அபூ தர்தா(ரலி), நூல்: முஸ்லிம்***

## சண்டையிடுடாதீர்!

“கடுமையாகச் சண்டையிடுபவன், மனதில் பகைமையை வைத்திருப்பவன் இறைவனிடம் மிகவும் வெறுப்புக்குரியவனாய் இருக்கிறான்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: ஆயிஷா(ரலி), நூல்: முஸ்லிம்**

## சாலைவிதி

“பாதைகளில் அமர்வது குறித்து உங்களை நான் எச்சரிக்கிறேன்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

“இறைத்தூதர் அவர்களே! நாங்கள் பேசிக் கொள்வதற்கு எங்களுக்கு சபைகள் தேவைப்படுகின்றனவே” என மக்கள் கூறினர்.

“நீங்கள் பேசித்தான் ஆகவேண்டும் என பாதையில் அமர்ந்தால் சாலைவிதிகளைப் பின்பற்றுங்கள்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

“அவை யாவை?” என மக்கள் வினவினார்கள்.

“அந்நியப் பெண்களைக் கூர்ந்து பார்க்காமல் பார்வையைத் தாழ்த்திக் கொள்வதும், பிறருக்குத் துன்பம் விளைவிக்காமல் இருப்பதும், ஸலாமுக்கு பதிலுரைப்பதும், நன்மை புரியத் தூண்டுவதும், தீமையிலிருந்து தடுப்பதும்தாம் அவை” என இறைத்தூதர்(ஸல்) பதிலளித்தார்கள்.

**அறிவித்தவர்: அபூ ஸயீத் அல் குத்ரீ(ரலி) நூல்: புகாரீ**

## நல்ல ஒழுக்கம்

“நல்ல ஒழுக்கத்தைவிட மறுமையின் தராசில் வேறு எதுவும் கனமானதாய் இருக்காது” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அபூ தர்தா(ரலி), நூல்: அபூ தாவூத், திர்மிதீ**

## வெட்கம்

“வெட்கம் இறைநம்பிக்கையின் ஒரு பகுதியாகும்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: இப்னு உமர்(ரலி), நூல்: புகாரீ, முஸ்லிம்**

“நீ வெட்கம் கொள்ளவில்லை எனில் நீ விரும்பியதை செய்து கொள்! என்பது முந்தைய இறைத்தூதுத்துவ மொழிகளில் ஒன்றாகும்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: இப்னு மஸ்வூத்(ரலி), நூல்: புகாரீ**

## ஆரோக்கியம்

ஆரோக்கியமான இறைநம்பிக்கையாளன் ஆரோக்கியமற்ற இறைநம்பிக்கையாளனைவிட இறைவனிடம் சிறந்தவனும் விருப்பத்திற்குரியவனும் ஆவான். இறைநம்பிக்கையுள்ள ஒவ்வொருவரிடமும் நன்மையுண்டு. உனக்கு பயனளிப்பதை நீ ஆசைப்படு. இறைவனிடம் மட்டுமே உதவிதேடு! உனக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால், “நான் இவ்வாறு இவ்வாறு செய் திருந்தால், இப்படியாகியிருக்குமே!” எனக் கூறாதே!” இறைவன் நாடியதே நடந்துள்ளது எனக் கூறிக்கொள்! ஏனெனில், அந்த வார்த்தை ஷைத்தானின் சூழ்ச்சிக்கு வழி திறக்கும்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம்**

## அக்கிரமம்

“ஒருவர் மற்றவர் மீது அக்கிரமம் இழைக்காமல், ஒருவர் மற்றவர் மீது பெருமை கொள்ளாமல் பணிந்தவர்களாக இருங்கள் என எனக்கு இறைச்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: இயாள் இப்னு ஹிமார்(ரலி), நூல்: முஸ்லிம்**

## தர்மம்

“தர்மம் எந்த செல்வத்தையும் குறைத்துவிடாது. அடியான் மன்னிப்புக் கோருவதால் இறைவன்அவனுடைய மதிப்பை மேலும் அதிகப்படுத்தவே செய்கிறான். இறைவனுக்காகத் தன்னைத் தாழ்த்திக் கொண்ட எந்த மனிதனையும் இறைவன் உயர்த்தாமல் இருக்க மாட்டான்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள். **அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம்**

## சுவர்க்கத்தில் நுழையுங்கள்!

“மக்களே! ஸலாமை (அமைதி) பரப்புங்கள்! உறவினரோடு

*சேர்ந்து வாழுங்கள்! உணவளியுங்கள்! மேலும் இரவில் மக்கள் தூங்கும்போது நீங்கள் எழுந்து தொழுங்கள். இவ்வாறு நீங்கள் செய்தால் சுவர்க்கத்தில் அமைதியுடன் நுழையலாம்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: அப்துல்லாஹ் இப்னு ஸலாம்(ரலி), நூல்: திர்மிதீ***

*"சுவர்க்கத்தில் மக்கள் நுழைவதற்கு அதிகமாக துணை நிற்பவை இறையச்சமும் நற்குணமும்'' என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.* ***அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: திர்மிதீ***

## மக்களைக் கவர்தல்

*"நீங்கள் உங்கள் சொத்துக்களால் மக்களைக் கவர முடியாது. மாறாக, உங்களின் மலர்ந்த முகம் மற்றும் நற்குணத்தால்தான் அவர்களைக் கவரமுடியும்'' என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.* ***அறிவித்தவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: அபூ யஃலா***

## கண்ணாடியாய் இருங்கள்!

*"இறைநம்பிக்கையாளன் இறைநம்பிக்கை கொண்டுள்ள தன் சகோதரனுக்குக் கண்ணாடி போலாவான்" என இறைத்தூதர் (ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: அபூ தாவூத்***

## துன்பங்களைச் சகித்துக் கொள்ளுங்கள்!

*''மக்களுடன் உறவாடி அவர்களிடமிருந்து வரக்கூடிய துன்பங்களைச் சகித்துக் கொள்ளும் இறைநம்பிக்கையாளன், மக்களுடன் உறவாடாத, அவர்களிடமிருந்து வரக்கூடிய துன்பங்களைச் சகிக்காத இறைநம்பிக்கையாளனைவிட மேலானவன்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: இப்னு உமர்(ரலி), நூல்: இப்னு மாஜா***

## ஒழுக்கமே அழகு

*"என் இறைவா! என்னை நீ அழகாகப் படைத்தது போல என் ஒழுக்கத்தையும் அழகுபடுத்துவாயாக!" என இறைத்தூதர் (ஸல்) பிராத்தித்தார்கள்.*

***அறிவித்தவர்: இப்னு மஸ்வூத்(ரலி), நூல்: அஹ்மத்***

## இவருடன் இறைவன் இருக்கிறான்

*“என் அடியான் என்னை நினைவு கூர்ந்தும், என் நினைவால் தன் உதடுகளை அசைத்துக் கொண்டும் இருக்கும் வரையில் நான் அவனுடன் இருக்கிறேன் என இறைவன் கூறுகிறான்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: இப்னு மாஜா***

## பிரார்த்தனையும் வணக்கமே

*“இறைவனைப் பிரார்த்தித்தல்; அதுவும் வணக்கமே” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: நுஃமான் இப்னு பஷீர்(ரலி), நூல்: அபூ தாவூத், திர்மிதீ***

## வெட்கப்படும் இறைவன்

*நிச்சயமாக உங்கள் இரட்சகன் அதிக வெட்கமுள்ளவன்; கொடையாளி. தன் அடியான் கையை ஏந்திவிட்டால், அதை ஒன்றுமே இல்லாமல் திருப்பி அனுப்புவதற்கு அவன் வெட்கப் படுகிறான்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: ஸல்மான்(ரலி), நூல்: அபூ தாவூத், திர்மிதீ***

## தூய சம்பாத்தியம்

*“எந்த வகை சம்பாத்தியம் தூயது?” என இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் வினவப்பட்டது.*

*“மனிதன் தன் கையால் உழைத்துச் சம்பாதிக்கும் சம்பாத்தியமும், ஏமாற்றமில்லாமல் நியாயமாகச் செய்யும் வியாபாரத்தின் மூலம் கிடைக்கும் லாபமும்'' என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: ரிஃபாஆ இப்னு ராஃபிஃ(ரலி), நூல்: பஸ்ஸார்***

## உரிமையாளருக்கே முன்னுரிமை

*‘‘விற்பவர் மற்றும் வாங்குபவருக்கு இடையில் பிரச்னை ஏற்பட்டு, அதற்கான எவ்வித ஆதாரமும் இல்லை என்றால், பொருளுக்கு உரியவரின் வாதமே ஏற்றுக்கொள்ளத் தக்கதாகும்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: இப்னு மஸ்வூத்(ரலி), நூல்: அஹ்மத், அபூ தாவூத், திர்மிதீ***

## இந்த சம்பாத்தியம் வேண்டாம்

*நாய் விற்பதன் மூலம் கிடைக்கும் சம்பாத்தியத்தையும், விபச்சாரியின் சம்பாத்தியத்தையும், குறிகாரன் வாங்கும் தட்சிணையையும் இறைத்தூதர்(ஸல்) தடை செய்தார்கள்.*

**அறிவித்தவர்: அபூ மஸ்வூத் அல் அன்ஸாரி(ரலி) நூல்: புகாரீ, முஸ்லிம்**

## எஞ்சிய நீரை விற்காதீர்!

*தம் தேவை போக மீதமுள்ள தண்ணீரை விற்பனை செய்யக் கூடாது என இறைத்தூதர்(ஸல்) தடைவிதித்துள்ளார்கள்.*

**அறிவித்தவர்: ஜாபிர் இப்னு அப்தில்லாஹ்(ரலி) நூல்: முஸ்லிம்**

## சினைக்கு விலையா?

*கால் நடைகளைச் சினைக்கு விட்டுச் சம்பாதிப்பதை இறைத் தூதர்(ஸல்) தடுத்துள்ளார்கள்.*

**அறிவித்தவர்: இப்னு உமர்(ரலி), நூல்: புகாரீ**

## வயிற்றிலுள்ள குட்டியை விற்காதீர்!

*கால்நடையின் வயிற்றிலுள்ள குட்டியை அது ஈன்றெடுப்பதற்கு முன்பு விலை பேசுவதையும், மடுவிலிருக்கும் பாலைக் கறக்கும் முன்பு விலை பேசுவதையும், தன் கைக்கே வராத பொருளுக்கு விலை பேசுவதையும் இறைத்தூதர்(ஸல்) தடைவிதித் துள்ளார்கள்.*

**அறிவித்தவர்: ஆபூ ஸயீத் அல் குத்ரீ(ரலி), நூல்: இப்னு மாஜா,**

## மோசடியான வியாபாரம்

*மோசடியை ஏற்படுத்தும் வியாபார முறை ஒவ்வொன்றையும் இறைத்தூதர்(ஸல்) தடை செய்தார்கள்.*

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: புகாரீ**

## அளக்கும் முன்பு விற்காதீர்!

*“உங்களில் ஒருவர் உணவுப் பொருள் வாங்கினால், அதை அளக்காமல் விற்பனை செய்ய வேண்டாம்” என இறைத்தூதர் (ஸல்) கூறினார்கள்.*

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: புகாரீ**

## ஒரு பொருளில் இரண்டு வியாபாரம்

ஒரு வியாபாரத்தில் இரண்டு வியாபாரங்கள் செய்வதை அதாவது ஒருவரிடம் ஒரு பொருளுக்கு விலை பேசிக் கொண்டிருக்கும்போதே இன்னொரு நபரிடம் அதே பொருளுக்கு மறு விலை பேசுவதை இறைத்தூதர்(ஸல்) தடைசெய்துள்ளார்கள்.

"ஒரு வியாபாரத்தில் இரண்டு வியாபாரங்களை செய்பவர் இரண்டிலும் தவறிழைக்க நேரிடும். அது வட்டியாகவும் கருதப்படும்" என்றும் இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: அபூ தாவூத்**

## பொறுப்பில் வராமல் விற்காதீர்!

"வியாபாரத்தில் ஒரு பொருள் தன் பொறுப்பில் வராதிருக்கும் போதே அதில் லாபம் பார்ப்பது கூடாது. உன்னிடம் இல்லாத ஒரு பொருளில் வியாபாரம் இல்லை" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்

**அறிவித்தவர்: அம்ர் இப்னு ஷுஐப், நூல்: அஹ்மத், அபூ தாவூத்**

## உழவர் சந்தையை அடையட்டும்

சந்தையில் வியாபாரம் செய்வதற்காக வரும் வணிகக் கூட்டத்தை இடையில் வழிமறித்து யாரும் சந்திக்க வேண்டாம். இன்னும் நகரவாசி கிராமவாசியிடம் வியாபாரம் செய்ய வேண்டாம்" அதாவது "நகரவாசி கிராமவாசிக்கு இடைத்தரகராக செயல்படக்கூடாது" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: இப்னு அப்பாஸ்(ரலி), நூல்: புகாரீ**

## சந்தை நிலவரத்தை மறைக்காதீர்!

வணிகப் பொருட்கள் கொண்டு வருவோரை சந்தைக்கு வருமுன் வழிமறித்து யாரும் சந்திக்க வேண்டாம். அப்படியே ஒருவர் சந்தித்தாலும் இருவரும் சந்தைக்கு வரும் வரை வியாபாரம் செய்ய வேண்டாம். அதுவும் பொருளுக்குரியவரின் விருப்பத் தில்தான் உள்ளது" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: புகாரீ, முஸ்லிம்**

## உணவுப் பொருட்களைப் பதுக்காதீர்!

“உணவுப் பொருட்களைப் பதுக்காதீர்கள். ஏனெனில், குற்றவாளி தான் உணவுப் பொருட்களைப் பதுக்குவான்” என இறைத் தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: மஃமர் இப்னு அப்தில்லாஹ்(ரலி), நூல்: முஸ்லிம்**

## ஏமாற்றும் வியாபாரம் செய்யாதீர்!

கால் நடையை விற்பனை செய்யும்போது அதன் பாலைக் கறக்காமல் அதன் மடியை கனக்கச் செய்து அதிகமாக பால் தருவது போலக் காண்பித்து விற்காதீர்கள். இது போன்ற கால் நடையை வாங்கிய ஒருவர் அதன் பாலைக் கறந்து நன்கு ஆய்வு செய்து உண்மை தெரியவந்தால், அவர் விரும்பினால் அதை தன்னிடமே வைத்துக் கொள்ளலாம். அல்லது ஒரு ஸாவு அதாவது சுமார் 1.5 கிலோ தானியத்துடன் விற்றவரிடம் அதைத் திருப்பிக் கொடுத்து விடலாம். இந்த உரிமை அவருக்கு மூன்று நாள்களுக்கு மட்டுமே உள்ளது” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: புகாரி மற்றும் முஸ்லிம்**

## உணவுப் பொருளில் கலப்படம் செய்யாதீர்!

ஓர் உணவுக் குவியலை இறைத்தூதர்(ஸல்) கடந்து சென்றபோது அதனுள் தம் கையை நுழைத்து சோதனையிட்டார்கள். அவர்களின் கையில் ஈரம் தென்பட்டது.

“உணவுக்காரரே! இது என்ன?” என கண்டிப்புடன் கேட்டார்கள்.

“இறைத்தூதர் அவர்களே! மழை பொழிந்துவிட்டது” என அவர் கூறினார்.

“மக்கள் பார்க்கும் விதமாக அதை நீ மேலே போட்டிருக்க வேண்டாமா? ஏமாற்றுகிறவர் நம்மைச் சார்ந்தவரல்லர்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம்**

## அறுவடையைத் தாமதிக்காதீர்!

“நன்கு தெரிந்து கொண்டே பழ வகைகளை அறுவடைக்

காலத்தில் அறுவடை செய்யாமல் பதுக்கி வைத்துவிட்டு பின்னர் மது தயாரிக்கும் நபருக்கு அதை விற்பனை செய்பவர் நரகத்தில் புகுவார்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அப்துல்லாஹ் இப்னு புரைதா(ரலி), நூல்: தப்ரானி**

## பொருளை வாங்கும் கட்டாயமில்லை

"விற்பவர் மற்றும் வாங்குபவர் ஆகிய இருவருக்கும் இடையில் எவ்வித ஒப்பந்தமும் இல்லாத நிலையில் அவ்விருவரும் வியாபாரத்தைத் தொடரவோ முறித்துக் கொள்ளவோ உரிமை பெற்றுள்ளனர். விலை பேசிவிட்டதால் பொருளை வாங்கித்தான் ஆகவேண்டும் என்ற கட்டாயம் இல்லை" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அம்ர் இப்னு ஷுஐப்(ரலி), நூல்: அஹ்மத், அபூ தாவூத்**

## கூட்டு வியாபாரம்

"நீங்கள் என்னுடன் வியாபாரம் செய்தால் நான் உங்களை ஏமாற்ற மாட்டேன். நீங்களும் என்னை ஏமாற்றாதீர்கள் என்ற தெளிவான ஒப்பந்தம் செய்து கொண்டு கூட்டு வியாபாரம் செய்யுங்கள்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவிவித்தவர்: இப்னு உமர்(ரலி), நூல்:**

## வியாபாரத்தில் கூட்டு மற்றும் வக்காலத்து

"கூட்டாளிகளில் ஒருவருக்கொருவர் மோசடி செய்யாமல் இருக்கும் வரை, அந்த இரண்டு பங்குதாரர்களுக்கிடையே நான் மூன்றாவது பங்குதாரராக இருப்பேன். அதில் யாரேனும் ஒருவர் மோசடி செய்தால், அவர்கள் இருவரிடமிருந்தும் நான் விலகிக் கொள்வேன்" என இறைவன் கூறுகிறான் என்று இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: அபூ தாவூத்**

## வட்டியின் வாடையும் வேண்டாம்

வட்டி வாங்குபவரையும், வட்டி செலுத்துபவரையும், அதற்கு கணக்கு எழுதுபவரையும், அதற்கு சாட்சி சொல்பவர்களையும் இறைத்தூதர்(ஸல்) சபித்துவிட்டு, "அவர்கள் அனைவரும் குற்றத்தில் சமமானவர்கள்" என்றும் கூறினார்கள்.

**அறிவித்தவர்: ஜாபிர்(ரலி), நூல்: புகாரீ**

*“தங்கத்திற்கு பதில் தங்கத்தை சம அளவில் தவிர விற்பனை செய்ய வேண்டாம். கால தாமதத்தை அடிப்படையாக வைத்து கொடுத்ததிலிருந்து அதிகமாகப் பெறவேண்டாம். அவ்வாறே, வெள்ளிக்கு பதில் வெள்ளியை சம அளவில் தவிர விற்பனை செய்யவேண்டாம். கால தாமதத்தை அடிப்படையாக வைத்து கொடுத்ததிலிருந்து அதிகமாகப் பெறவேண்டாம்...” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

**அறிவித்தவர்: அபூ ஸயீத் அல் குத்ரீ(ரலி), நூல்: முஸ்லிம்**

*‘‘தங்கத்திற்குத் தங்கம், வெள்ளிக்கு வெள்ளி, மணிக் கோதுமைக்கு மணிக்கோதுமை, வாற்கோதுமைக்கு வாற் கோதுமை, பேரீச்சம் பழத்திற்குப் பேரீச்சம் பழம், உப்புக்கு உப்பு ஒரே தரத்தில், சம அளவில் கால அவகாசத்தைக் கணக் கிடாமல் கொடுக்கல் வாங்கல் செய்து கொள்வது குற்றமாகாது. பொருட்கள் மாறுபடும்போது உடனுக்குடன் நீங்கள் விரும்பிய விலைக்கு விற்றுக் கொள்வதில் குற்றமில்லை. கால அவகாசத்தின் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்தல் கூடாது” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

**அறிவித்தவர்: உபாதா இப்னு ஸாமித்(ரலி)**

*“தங்கத்திற்கு பதிலாக தங்கத்தை எடைக்கு எடை ஒரே தரத்தில், இன்னும் வெள்ளிக்கு பதிலாக வெள்ளியை எடைக்கு எடை, ஒரே தரத்தில் கொடுக்கல் வாங்கல் செய்து கொள்ளுங்கள். இதில் அதிகமாக வாங்குவதோ, அல்லது கொடுப்பதோதான் வட்டியாகும்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி)**

## அள்ளிக் கொட்டாதீர்!

*அளவு தெரியாத பேரீச்சம் பழக் குவியலைக் குறிப்பிட்ட அளவுள்ள பேரீச்சம் பழக்குவியலுக்குப் பதிலாக விற்பனை செய்வதை இறைத்தூதர்(ஸல்) தடைசெய்தார்கள்.*

**அறிவித்தவர்: ஜாபிர் இப்னு அப்தில்லாஹ்(ரலி), நூல்: முஸ்லிம்**

## லஞ்சம் வேண்டாம்!

*லஞ்சம் வாங்குபவரையும் லஞ்சம் கொடுப்பவரையும் இறைத் தூதர்(ஸல்) சபித்தார்கள்.*

**அறிவித்தவர்: அப்துல்லாஹ் இப்னு அமர் (ரலி), நூல்: அபூ தாவூத்**

## மரத்தில் இருப்பதை விலை பேசாதீர்!

*மரத்தில் இருக்கும் பேரீச்சம் பழத்தை அளக்கப்பட்ட பேரீச்சம் பழத்திற்குப் பதிலாக விற்பதையும், கொடியில் இருக்கும் திராட்சையை அளக்கப்பட்ட கிஸ்மிஸ் பழத்திற்குப் பதிலாக விற்பதையும், நிலத்திலுள்ள பயிருக்காக அளக்கப்பட்ட உணவுப் பொருள்களை விற்பதையும் இறைத்தூதர்(ஸல்) தடைசெய்தார்கள்.*

**அறிவித்தவர்: இப்னு உமர்(ரலி), நூல்: புகாரீ முஸ்லிம்**

## கொடுக்கும் நோக்கத்துடன் வாங்குங்கள்!

*“மக்களின் பொருளை அவர்களிடம் திரும்பச் செலுத்தி விட வேண்டும் என்ற எண்ணத்துடன் வாங்குபவருக்காக இறைவன் அதைச் செலுத்துகிறான். அதை அழிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் வாங்குபவருக்கு இறைவன் அதை அழித்து விடுகிறான்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: புகாரீ**

## அடமானப் பொருளில் லாபம் ஈட்டாதீர்!

*“அடமானம் வைக்கப்பட்ட கால்நடையில் அதன் செலவிற்குத் தக்கவாறு சவாரி செய்யலாம். இன்னும் பால் தரும் கால் நடையிடமிருந்து, அதன் செலவிற்குத் தக்கவாறு பால் அருந்தலாம். இந்தச் செலவு சவாரி செய்பவர் மற்றும் பால் அருந்துபவரையே சாரும்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: புகாரீ**

*“அடமானம் வைக்கப்பட்ட பொருள் அதன் எஜமானனை விட்டு (லாபம்) அடைக்கப்பட்டதல்ல. அதன் லாபம் அவனுக்கே உரியது; அதன் இழப்பும் அவனுக்கே உரியது” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: தாரகுத்னீ, ஹாகிம்**

## லாபம் ஈட்டும் கடன் வட்டியாகும்

*“லாபம் ஈட்டித் தரும் ஒவ்வொரு கடனும் வட்டியாகும்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

**அறிவித்தவர்: அலீ(ரலி), நூல்: ஹாகிம், இப்னு அபீ உஸாமா**

## திவால்

திவால் ஆனவரிடம் ஒருவர் தன்னுடைய சொத்தை அப்படியே கண்டால் (அதை எடுத்துக்கொள்ள) அவரே மற்ற அனை வரையும்விட உரிமை பெற்றவராவார்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: புகாரீ, முஸ்லிம்**

## கடனும் மானமும்

“வசதியுள்ளவர் (கடனைத் திருப்பித் தராமல்) தள்ளிப் போடு வாராயின் அவரின் மானம்போகும்படி அவரைக் கண்டிப்பதும் அவரைத் தண்டிப்பதும் அனுமதிக்கப்பட்டதாகிவிடுகிறது” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அம்ர் இப்னு ஷர்யத், நூல்: அபூ தாவூத் மற்றும் நஸயீ**

## கடனாளியின் சொத்தை ஜப்தி செய்தல்

முஆத்(ரலி) அவர்களின் சொத்தை விற்கவிடாமல் இறைத்தூதர் (ஸல்) தடுத்து, அவரின் கடனை அடைப்பதற்காக அந்தச் சொத்தை விற்பனை செய்தார்கள்.

**அறிவித்தவர்: கஅப் இப்னு மாலிக்(ரலி), நூல்: தாரகுத்னீ**

## கணவனுக்குத் தெரியாமல்

“கணவன் தன் மனைவியின் பொறுப்பை ஏற்றிருக்கும்போது கணவனின் அனுமதி இல்லாமல் ஒரு பெண் அன்பளிப்பு எதுவும் செய்யக் கூடாது. சொத்தில் தன்னிச்சையான அவளின் எந்த நடவடிக்கையும் ஏற்கப்படாது” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அம்ர் இப்னு ஷுஐபு, நூல்: அபூ தாவூத், திர்மிதீ, அஹ்மத்**

## யாசிக்கும் தகுதி

மூன்று நபர்களைத் தவிர வேறு யாரும் தம் தேவைகளைப் பிறரிடம் கேட்கக் கூடாது.

1. கடனுக்குப் பொறுப்பேற்று அதைக் கொடுக்க முடியாமல் தவிக்கும் ஒருவர் அதை அடைக்கும் வரை பிறரிடம் உதவி கேட்கலாம். அது அவருக்கு அனுமதிக்கப்பட்டதாகும். அவரின்

தேவை நிறைவேறிவிட்டால் அவர் கேட்பதை நிறுத்திக் கொள்ளவேண்டும்.

2. ஒருவருக்கு ஏதேனும் அழிவு ஏற்பட்டு, அதனால் அவர் பாதிப்பிற்குள்ளாகி இருந்தால் அவர் தன் வாழ்க்கையைச் சீரமைத்துக் கொள்ளும் அளவுக்குப் பிறரிடம் கேட்பது அனுமதிக்கப்பட்டதாகும்.

3. ஒருவருக்குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டு அவரின் சமூகத்தாரில் மூவர், "உண்மையில் அவருக்கு நஷ்டம் ஏற்பட்டு விட்டது" எனச் சாட்சி கூறினால் அவரின் வாழ்க்கை சீராகும் வரை பிறரிடம் தர்மம் கேட்பது அவருக்கு அனுமதிக்கப்பட்டதாகும்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: கபீஸா இப்னு முகாரிக்(ரலி), நூல்: முஸ்லிம்**

## அண்டை வீட்டார்

"ஓர் அண்டை வீட்டார் மற்றோர் அண்டை வீட்டாரின் சுவரில் கழியைப் பதிப்பதை தடுக்க வேண்டாம்; ஒருவருக்கொருவர் உதவியாக இருங்கள்!" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: புகாரீ, முஸ்லிம்**

## கடன் சுமை

ஒருவர் இறந்துவிட்டார். நாங்கள் அவரைக் குளிப்பாட்டி, நறுமணம் பூசி, கஃபன் என்னும் ஆடையை அணிவித்து இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் கொண்டு வந்து அவருக்காகத் தொழுது பிரார்த்திக்குமாறு கூறினோம். அவர்கள் ஓர் அடி முன் எடுத்து வைத்துவிட்டு, "இவர் மீது கடன் ஏதும் உள்ளதா?" எனக் கேட்டார்கள்.

"இரண்டு தீனார் கடன் உள்ளது" என நாங்கள் கூறினோம்.

இதைக் கேட்டவுடன் இறைத்தூதர்(ஸல்) அவருக்காக தொழுகை நடத்தாமல் திரும்பிச் செல்ல முற்பட்டார்கள். அப்போது அபூ கதாதா என்பவர், "அந்த இரண்டு தீனாருக்கும் நான் பொறுப்பேற்கிறேன்; அவரின் கடனை நான் செலுத்தி விடுகிறேன்" எனக் கூறினார்.

அதன் பின்னர், "கடன்காரருக்கு உரிமை கிடைத்து விட்டது! இப்பிரேதமும் அதை விட்டு விலகிக் கொண்டது" என இறைத் தூதர்(ஸல்) கூறினார்கள். "ஆமாம்" என அபூ கதாதா கூறினார். உடனே அப்பிரேதத்திற்கு இறைத்தூதர்(ஸல்) தொழுகை நடத்தினார்கள்.

***அறிவித்தவர்: ஜாபிர்(ரலி), நூல்: அஹ்மத், அபூ தாவூத் மற்றும் நஸயீ***

## கடனாளி இறப்பினும் பொறுப்பாளியே

கடனாளியாக உள்ள ஒருவரின் பிரேதம் இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் கொண்டு வரப்பட்டால், "இவர் தன்னுடைய கடனைச் செலுத்த ஏதேனும் விட்டுச் சென்றிருக்கிறாரா?" எனக் கேட்பார்கள். அவர் விட்டுச் சென்றது கூறப்பட்டால் அவருக்குத் தொழுகை நடத்துவார்கள். இல்லையெனில், "உங்கள் நண்பருக்கு நீங்கள் தொழுகை நடத்திக் கொள்ளுங்கள்" எனக் கூறி விலகிக் கொள்வார்கள். இறைத்தூதர்(ஸல்) அவர் களுக்குப் பிற்காலத்தில் இறைவன் பொருளாதாரத்தில் செழிப்பைக் கொடுத்ததால் "முஸ்லிம்களின் உயிர்கள் மீது நானே அதிக உரிமை பெற்றவன். எவரேனும் இறந்து விட்டு அவருக்குக் கடன் இருந்தால் அதைத் தீர்ப்பது என் பொறுப்பு" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

***அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: புகாரீ, முஸ்லிம்***

## உண்மை கசக்கும்

"உண்மையையே பேசுங்கள்; அது கசப்பாக இருப்பினும் சரியே" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

***அறிவித்தவர்: அபூ தர்(ரலி), நூல்: இப்னு ஹிப்பான்***

## இரவல்

"பிறரிடமிருந்து ஒரு பொருளை வாங்கியவர் அதைத் திரும்பக் கொடுக்கும் வரை வாங்கியவரே அப்பொருளுக்குப் பொறுப்பாளியாவார்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்

***அறிவித்தவர்: ஸமுரா இப்னு ஜுன்துப்(ரலி), நூல்: அஹ்மத் அபூ தாவூத், நஸயீ, திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா***

## மோசக்காரனுக்கும், மோசம் செய்யாதீர்!

*"உங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்துள்ள பொருளை ஒப்படைத்தவரிடம் அவர் கேட்கும்போது முறையாகக் கொடுத்துவிடுங்கள். அவர் உங்களுக்கு மோசடி செய்தவராக இருந்தாலும்கூட, நீங்கள் அவருக்கு மோசடி செய்யாதீர்கள்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: அபூ தாவூத்***

## நில அபகரிப்பு

*"பூமியில் பிறரின் பங்கை அநியாயமாக ஓர் அங்குலத்தை எடுப்பவனுக்கு, மறுமையில் ஏழு பூமிகளை அவனுடைய கழுத்தில் மாலையாக இறைவன் போட்டுவிடுவான்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: ஸயீத் இப்னு ஸைத்(ரலி), நூல்: புகாரீ, முஸ்லிம்***

## பொருளுக்கு பொருள் ஈடு

*தம் மனைவியரில் ஒருவரின் வீட்டில் இறைத்தூதர்(ஸல்) இருந்தபோது, அவர்களின் இன்னொரு மனைவி தம் பணிப்பெண்ணிடம் ஒரு தட்டில் அவர்களுக்காக உணவு கொடுத்து அனுப்பினார். அதை இறைத்தூதரின் மனைவி கையால் தட்டிவிட்டார். அத்தட்டு கீழே விழுந்து உடைந்து விட்டது.*

*இறைத்தூதர்(ஸல்) அந்தத் தட்டை ஒன்றுசேர்த்து, உணவை அதில் போட்டு அங்கிருந்த தம் தோழர்களிடம், "இதைச் சாப்பிடுங்கள்!" என்றார்கள். பின்னர் உணவு கொண்டு வந்தவரிடம் ஒரு நல்ல தட்டைக் கொடுத்து உடைந்த தட்டை வைத்துக் கொண்டார்கள்.*

*பின்னர் தம் தோழர்களை நோக்கி "உங்கள் அன்னை அதாவது என் மனைவி ரோஷப்பட்டுவிட்டார்" என புன்னகையுடன் கூறினார்கள்.*

***நூல்: புகாரீ, திர்மிதீ***

## பிறர் நிலத்தில் பயிரிட்டவர்

*"அனுமதியின்றி பிறரின் நிலத்தில் பயிரிட்டவருக்கு அதிலிருந்து எதுவும் கொடுக்கப்படாது. அப்படியே கொடுக்க வேண்டிய*

*தாய் இருந்தாலும் அவர் செலவிட்ட அளவு மட்டுமே கொடுக்கப்படும்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: ராஃபிவு இப்னு கதீஜ்(ரலி), நூல்: அஹ்மத், அபூ தாவூத்***

## வீடு விற்பதும் அண்டை வீட்டாரும்

*"பக்கத்து வீட்டை வாங்குவதில் அண்டை வீட்டாரே அதிகம் உரிமை பெறுகிறார். எனவே, அவர் ஊரில் இல்லாவிட்டாலும் அவர் வரும் வரை காத்திருந்து, பிறகுதான் விற்கவேண்டும். இருவரின் வீட்டுப்பாதை ஒன்றாக இருக்கும் வரையே இந்த நிபந்தனை" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: ஜாபிர்(ரலி), நூல்: அஹ்மத், அபூ தாவூத், திர்மிதீ***

## விவசாய ஒப்பந்தம் மற்றும் கூலி

*"என் பெயரால் வாக்குறுதியளித்துவிட்டு மாறுசெய்பவன்; சுதந்திரமாகத் திரிபவனை அடிமையாக விற்பனை செய்து அதன் கிரயத்தை உண்பவன் இன்னும் பணியாளரிடம் முழுக்கமுழுக்க வேலை வாங்கிக் கொண்டு, அவனுக்குரிய கூலியைக் கொடுக்காதவன் ஆகிய மூன்று நபர்களுக்கு எதிராக மறுமையில் நான் வாதிடுவேன்" என்று இறைவன் கூறுகிறான்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம்***

## வியர்வை உலரும் முன் கூலி...

*"தொழிலாளியின் வியர்வை உலரும் முன்பு அவனுக்குரிய கூலியைக் கொடுத்துவிடுங்கள்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: இப்னு உமர்(ரலி), நூல்: இப்னு மாஜா***

## கூலி நிர்ணயமின்றி நியமிக்காதீர்!

*"பணியாளனை நியமிப்பவர், நியமிக்கும்போதே அவருக்கான கூலியையும் நிர்ணயித்துக் கூறட்டும்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: அபூஸயீத் அல் குத்ரீ(ரலி), நூல்: அப்துர் ரஸ்ஸாக்***

## பொது நிலங்கள் அரசுடமை

*“இஸ்லாமிய அரசில் யாருக்கும் சொந்தமில்லாத நிலம் அரசுக்கே சொந்தமாகும்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

**அறிவித்தவர்: இப்னு அப்பாஸ்(ரலி), நூல்: புகாரீ**

## நட்டம் ஏற்படுத்தாதீர்!

*“பிறருக்கு நட்டம் ஏற்படுத்துவதும், (ஏமாளித்தனமாக) நட்டத்தை ஏற்பதும் அனுமதிக்கப்பட்டதல்ல” என இறைத் தூதர்(ஸல்) கூறினார்கள்.*

**அறிவித்தவர்: இப்னு அப்பாஸ்(ரலி), நூல்: அஹ்மத், இப்னு மாஜா**

## உழுதவருக்கே நிலம் சொந்தம்

*“யாருக்கும் சொந்தமில்லாத அதாவது அரசு நிலத்தில் ஒருவர் நான்கு வேலிகளை அமைத்துக் கொண்டால், அது அவருக்கே உரியது” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

**அறிவித்தவர்: ஸமுரா இப்னு ஜுன்துப்(ரலி), நூல்: அபூ தாவூத்**

*“யாருக்கும் சொந்தமில்லாத புறம்போக்கு நிலத்தைச் சீர் செய்து உயிர்ப்பிக்கும் நபருக்கே அந்த நிலம் உரியது” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

**அறிவித்தவர்: ஆயிஷா(ரலி), நூல்: புகாரீ**

## நதிகள் தேசிய மயம்

*நான் இறைத்தூதர்(ஸல்) அவர்களுடன் ஒரு போரில் இருந்த போது, “தாவரங்கள், தண்ணீர், நெருப்பு ஆகிய மூன்று பொருட்களில் உலக மக்கள் அனைவரும் பங்குதாரர்கள். இதை யாரும் யாருக்கும் தடை செய்யக்கூடாது” என இறைத் தூதர்(ஸல்) கூறினார்கள்.* **நூல்: அஹ்மத், அபூ தாவூத்**

## இறந்தப்பின்பும் நன்மை

*ஒரு மனிதன் இறந்துவிட்டால்,“நிலையான தர்மம், பயன் தரும் கல்வி, தனக்காகப் பிரார்த்திக்கும் வாரிசு ஆகிய மூன்றைத் தவிர மற்ற அனைத்து செயல்களும் அவனை விட்டு தடை பட்டுவிடுகின்றன” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்..*

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம்**

## அன்பளிப்பைத் திரும்பப் பெறாதீர்!

*“தான் அன்பளிப்புச் செய்ததை (திருப்பித் தருமாறு கேட்டு) திரும்பப் பெறுகிறவர் வாந்தி எடுத்துவிட்டு மறுபடியும் அதை தின்னும் நாயைப் போன்றவர்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்*

***அறிவித்தவர்: இப்னு அப்பாஸ்(ரலி), நூல்: புகாரீ, முஸ்லிம்***

*“தன் மகனுக்குத் தந்தை கொடுத்த அன்பளிப்பைத் தவிர்த்து, பிறருக்குத் தானளித்த அன்பளிப்பைத் திரும்பப் பெறுவது முஸ்லிமான எந்த ஓர் ஆணுக்கும் அனுமதிக்கப்பட்டதன்று” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: இப்னு உமர் மற்றும் இப்னு அப்பாஸ்(ரலி), நூல்: அஹ்மத், அபூ தாவூத், நஸயீ, திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா,***

## அன்பளிப்புக்குக் கைமாறு செய்யுங்கள்!

*இறைத்தூதர்(ஸல்) அன்பளிப்பைப் பெற்றுக் கொண்டும், அதற்குக் கைம்மாறு செய்துகொண்டும் இருந்தார்கள்.*

***அறிவித்தவர்: ஆயிஷா(ரலி), நூல்: புகாரீ***

*“நீங்கள் ஒருவருக்கொருவர் அன்பளிப்புச் செய்து, உங்களுக் கிடையே அன்பை அதிகப்படுத்திக் கொள்ளுங்கள்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்*

***அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: அல் அதபுல் முஃப்ரத்***

## அன்பளிப்பை இழிவாகக் கருதாதீர்!

*“முஸ்லிம் பெண்களே! ஒருவருக்கு அவரின் அண்டை வீட்டார் ஆட்டு குழம்பைக் கொடுத்தாலும் அதை இழிவாகக் கருதாதீர்கள்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி), நூல்: புகாரீ, முஸ்லிம்***

## கண்டெடுக்கும் பொருள்

*“கண்டெடுக்கும் பொருட்கள் குறித்து இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் ஒருவர் வினவினார்.*

*“அதனுடைய பை மற்றும் சுருக்கிடும் கயிற்றை அறிவிப்புச் செய்! பின்னர் ஒரு வருட காலம் காத்திரு! அந்தப் பொருளுக்கு உரியவர் வந்துவிட்டால் அது அவருக்கே உரியதாகும்.*

இல்லையெனில், அதை நீ பயன்படுத்திக்கொள்!'' என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

“காணாமல் போன ஆடு?” என அவர் கேட்டார்

“அது உனக்குரியது அல்லது; அது உன் சகோதரன் அல்லது ஓநாய்க்குரியதாகும்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

“காணாமல் போன ஒட்டகம்?” என அவர் கேட்டார்.

“உனக்கும் அதற்கும் என்ன சம்பந்தம்? அதனுடன் அதன் வயிறும் கால்களும் இருக்கின்றன. அதை அதனுடைய எஜமானன் காணும்வரை அது தண்ணீரைப் பருகிக் கொண்டும், மரங்களைத் தின்று கொண்டும் திரியும்” என இறைத்தூதர் (ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: ஸைதுப்னு காலித் அல் ஜுஹனீ(ரலி), நூல்: புகாரீ, முஸ்லிம்**

## பிறரின் பொருளைப் பதுக்காதீர்!

“காணாமல் போன கால்நடைக்கு அபயமளித்தவர், அதை அறிவிக்காத வரை வழிகேட்டில் உள்ளார்” என இறைத்தூதர் (ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: ஸைத் இப்னு ஃகாலித் அல் ஜுஹனீ(ரலி), நூல்: முஸ்லிம்**

## இதில் வாரிசுரிமை இல்லையா?

“வேறுபட்ட இரு மதத்தினர், ஒருவருக்கொருவர் வாரிசாக முடியாது” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி), அஹ்மத், அபூ தாவூத்**

## கொலையாளிக்கு சொத்தில் உரிமையா?

“கொலையாளிக்கு (கொலை செய்யப்பட்டவரிடமிருந்து) சொத்தில் உரிமை எதுவும் இல்லை” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அம்ர் இப்னு ஷுஐப், நூல்: நஸயீ, தாரகுத்னீ**

## கூட்டுக் குடும்பம்

“தந்தை அல்லது பிள்ளைகள் வீட்டிற்கு எதைக் கொண்டு வந்தாலும் அதில் (வீட்டிலுள்ள) உறவினர் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு” என இறைத்தூதர்(ஸல்) கூற நான் செவியுற்றேன்.

**அறிவித்தவர்: உமர்(ரலி), நூல்: அபூ தாவூத், நஸயீ**

## குடிபானத்தில் ஈ விழுந்தால்

*"உங்கள் குடிபானத்தில் ஈ விழுந்து விட்டால், அதை உள்ளே மூழ்கடித்து விட்டுப் பின்னர் வெளியில் எடுத்து விடவும். ஏனெனில், அதன் ஓர் இறக்கையில் நோயும் மற்றோர் இறக்கையில் நிவாரணமும் உள்ளது'' என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

**அறிவித்தவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: புகாரீ, அபூ தாவூத்.**

## இவற்றை விற்காதீர்!

*"மதுபானம், தானாக இறந்தவை, பன்றி மற்றும் சிலைகள் ஆகியவற்றை விற்பனை செய்வதை இறைவன் தடுத்துவிட்டான்" என இறைத்தூதர்(ஸல்) மக்கா வெற்றியின்போது அறிவித்தார்கள்.*

*"இறைத்தூதர் அவர்களே! தாமாக இறந்தவற்றின் கொழுப்பைப் பற்றிக் கூறுங்கள். ஏனெனில், அதைக் கொண்டு படகுகளை வழவழப்பாக்கவும், தோல்களைப் பதப்படுத்தவும் செய்கிறார்கள். இன்னும் மக்கள் அதன் மூலம் விளக்கும் எரிக்கின்றனர்" என கேட்கப்பட்டது.*

*"கூடாது. அதுவும் தடுக்கப்பட்டதே" எனக் கூறி, "யூதர்களை அல்லாஹ் நாசமாக்கட்டும்! அல்லாஹ் அவர்களுக்கு (தானாக இறந்த) அதன் கொழுப்புகளைத் தடை செய்தபோது, அவர்கள் அதை உருக்கி விற்று அதன் கிரயத்தை உண்டார்கள்" என்றும் கூறினார்கள்.*

**அறிவித்தவர்: ஜாபிர் இப்னு அப்தில்லாஹ்(ரலி), நூல்: புகாரீ, முஸ்லிம்**

## இறைவனின் கடமை!

*"முஆதே! அடியார்களின் மீது அல்லாஹ்வுக்குள்ள உரிமை என்னவென்று உமக்குத் தெரியுமா?" என இறைத்தூதர்(ஸல்) என்னிடம் கேட்டார்கள்.*

*"அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே நன்கு அறிவர்" என நான் பதிலுரைத்தேன்.*

*"அவர்கள் அவனை மட்டுமே வணங்குவதும், அவனுக்கு எதையும் இணை கற்பிக்காது இருப்பதுமாகும்'' எனக் கூறினார்கள்.*

*“அடியார்களுக்கு அல்லாஹ்வின் மீதுள்ள உரிமை என்னவென்று உமக்குத் தெரியுமா?” என இறைத்தூதர்(ஸல்) என்னிடம் (இன்னொரு கேள்வி) கேட்டார்கள்.*

*“அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே நன்கு அறிவர்” என நான் (அப்போதும்) பதிலுரைத்தேன்.*

*“தன்னை மட்டுமே வணங்கிய அவர்களை அவன் (மறுமையில்) வேதனை செய்யாமல் இருப்பது” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: முஆத் இப்னு ஜபல்(ரலி), நூல்: புகாரீ 7373***

## *இது சாதாரணப் பொய்யல்ல!*

*“என் மீது (நான் சொல்லாத ஒன்றைச் சொன்னதாக, நான் செய்யாத ஒன்றைச் செய்ததாக) கூறும் பொய், ஒருவர் மற்றவர் மீது கூறும் பொய்யைப் போன்றதல்ல. என் மீது வேண்டும் என்றே பொய்யுரைப்பவன் தன் இருப்பிடத்தை நரகத்தில் ஆக்கிக்கொள்ளட்டும்...” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: முகைரா(ரலி), நூல்: புகாரீ 1291***

## *இச்செய்தியை எடுத்துரையுங்கள்!*

*“ஒரேயொரு செய்தியேனும் சரி! என்னிடமிருந்து கிடைத்தால், அதை (அனைவருக்கும்) எட்டச் செய்யுங்கள். பனூ இஸ்ராயீல்களின் வாயிலாகக் கிடைத்த செய்திகளையும் அறிவியுங்கள். அதனால் குற்றமில்லை. ஆனால், என் மீது (நான் சொல்லாத ஒன்றைச் சொன்னதாக) வேண்டுமென்றே பொய்யுரைத்தவன் தன் இருப்பிடத்தை நரகத்தில் அமைத்துக் கொள்ளட்டும்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர்(ரலி) நூல்: புகாரீ 3461***

*******

“ஒரேயொரு செய்தியேனும் சரி! என்னிடமிருந்து கிடைத்தால், அதை (அனைவருக்கும்) எட்டச்செய்யுங்கள். பனூஇஸ்ராயீல்களின் வாயிலாகக் கிடைத்த செய்திகளையும் அறிவியுங்கள். அதனால் குற்றமில்லை. ஆனால், என் மீது (நான் சொல்லாத ஒன்றைச் சொன்னதாக) வேண்டுமென்றே பொய்யுரைத்தவன், தன் இருப்பிடத்தை நரகத்தில் அமைத்துக் கொள்ளட்டும்.”

- இறைத்தூதர் முஹம்மத்(ஸல்)
அறிவித்தவர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர்(ரலி)
நூல்: புகாரீ **3461**

“என் மீது (நான் சொல்லாத ஒன்றைச் சொன்னதாக, நான் செய்யாத ஒன்றைச் செய்ததாக) கூறும் பொய், ஒருவர் மற்றவர் மீது கூறும் பொய்யைப் போன்றதல்ல. என் மீது

**IPRC - Islamic Publications & Research Centre**
Madurai, Tamil Nadu, India.
For Contact: +91 9364414441 E-mail: iprcindia2000@gmail.com